www.padippakam.com

# தாமரை

மே '97

விலை ரூ.5



படிப்பகம்

www.padippakam.com

## தாமரை சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ரூ. | 5 |
| ஆண்டுச்சந்தா | ரூ. | 60 |
| வெளிநாடு | | |
| (இந்திய ரூபாயில்) | | |
| தனியிதழ் | ரூ. | 25 |
| ஆண்டுச்சந்தா | ரூ. | 300 |
| ஆயுள் சந்தா | ரூ. | 5000 |

## விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பின் அட்டை (பல வண்ணத்தில்) | ரூ.6,000 |
| பின் அட்டை | ரூ. 5,000 |
| உள் அட்டை | ரூ. 2,000 |
| ஒரு பக்கம் | ரூ. 1,000 |

'தாமரை'
"பாலன் இல்லம்"
19, செவாலியே சிவாஜி
கணேசன் சாலை,
தி.நகர், சென்னை-600 017.
(தொலைபேசி.4347689)

படிப்பகம்

www.padippakam.com

# தாமரை

மே '97


கதை

வைக்கம் முகம்மது பஷீர்
ஜீ. முருகன்
கௌரிஷங்கர்
சு.வேணுகோபால்

கட்டுரை

தோதாத்ரி
சி.சொக்கலிங்கம்
முப்பால்மணி
கிருஷ்ணகோபாலன்

கவிதை

சுகுமாரன்
ரமணிக் அக்ராவத்
சமீர் தண்டி
கவிதாபாரதி
ச.சரவணன்

மொழிபெயர்ப்பு

எம். ராமகிருஷ்ணன்
சித்ரா வெங்கி

ஓவியம்

ஆதிமூலம்
மருது
தோழன்
விஸ்வம்
போஸ் மருது
மனோகர்




முகப்போவியம்

படிப்பகம்

www.padippakam.com

# துக்க வெள்ளி

சுகுமாரன்

நிலவின் சீழ்
இரத்தப் படலமாய் ஒளிரும்
இந்த இரவு

துரோகப் பெருமூச்சுகளால்
புகைந்து வீசும்
இந்தக் காற்று.

உலோபியின் தருமம் போலப்
பிரகாசிக்கும்
இந்த நட்சத்திரங்கள்.

வெட்டப்பட்ட காயத்தின்
மரநெடி மாறாத சிலுவையில்
நேசத்தின் பொய்ம்மைக்கும்
உண்மையின் கேலிக்கும்
இடையில்
தொங்கும் என் உயிர்

இன்னதென்ன அறிந்தே
இவர் செய்யும் பிழைகளால்
சூதாடப்பட்டவன் நான்.



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

முத்தத்தின் ஈரம் உலரும் முன்பே
விற்கப்பட்டவன் நான்.

எனது துக்கங்களை
அந்தரங்கமாக்கினேன்.
பிறர் கண்ணீரை
வெளியரங்கில் துடைத்தேன்.

எனினும்
எனது இரத்தம்
தாக உதடுகளில் தண்ணீராகவில்லை
சீசாக்களில் விற்பனையாயிற்று.
எனது மாமிசம்
பசிக் குடல்களில் உணவாகவில்லை
பந்திகளில் விரயமாயிற்று.

இந்த பூமி
என்னை விற்று வாங்கிய
இரத்த நிலத்தின் விஸ்தீரணம்.
இந்த ஆகாயம்
எனது நேசத்தின் வானவில்லை
ஒட்டி வைத்த ஒப்பந்த விதானம்.

மனிதனாய்ப் பிறந்திருந்தால்
குற்றங்களில் குதூகலித்திருப்பேன்
கடவுளாய்த் தோன்றியிருந்தால்
தண்டனை தந்து மகிழ்ந்திருப்பேன்.



படிப்பகம்

www.padippakam.com

என் பிறவி
வெளவாலுக்குச் சமம்
அது
விலங்கல்ல - எனினும்
விலங்கு
அது
பறவையல்ல - எனினும்
பறவை

ஒவ்வொரு மனிதனும்
முட்டைக்குள்ளேயே
அழுகியவனாயிருக்கிறான்
ஒவ்வொரு சிசுவும்
வாளால் பிளந்தே கர்ப்ப
விடுதலையாகிறது

தோளில் சிறகு முளைத்த
கடவுளாயிருப்பதைவிட
விரல்களில் சேற்றுப்புண்ணுள்ள
மனிதனாயிருப்பதுமேல்.

பிள்ளை பெறாத வயிறுகளும்
பால் கொடா முலைகளும்
பாக்கியம் பெறும் தினங்கள் இவை.

என் காயங்கள் ஐந்திலும்
எரிகிறது உப்புக்காற்று.

என் தேவனே, என் தேவனே,
நான் உம்மைக் கைவிடுகிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

# மனோன்மணீயம் சுந்தரனார் நூறாவது நினைவு ஆண்டு 1897-1997

முப்பால் மணி

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் திருநெல்வேலியில் அமைந்துள்ளது. அந்தப் பெயருக்குரிய பெருமகனார் 5.4.1855இல் பிறந்தார். ''நீராரும் கடலுடுத்த'' என்ற நாம் அன்றாடம் விழாக்களில் பாடும் தமிழ்த் தெய்வ வாழ்த்துப் பாடினார். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து 26.4.1897இல் மறைந்தார். இப்போது இவருடைய நூறாவது நினைவு ஆண்டு முடிவுற உள்ளது.

இவருடைய வரலாற்றை ராபர்ட்ஹார்வி, சேஷஅய்யர், நெல்லையப்ப பிள்ளை, அரங்கசாமி அய்யங்கார், பேரா. வையாபுரிப்பிள்ளை, மயிலை சீனி. வேங்கடசாமி, சுப்பிரமணிய அய்யர், சொக்கலிங்கம் (குகன்) ஆகியோர் எழுதியுள்ளனர்.

சுந்தரனார் பெற்றோர் பெருமாள்பிள்ளை, மாடத்தி. மனைவி சிவகாமி. மகன் நடராசன். மனோன்மணி என ஒரு மகள் இன்றுள்ள உறவினர் உறுதிபட உரைக்கின்றனர்.

சுந்தரனார் அன்றைய கல்வியை முழுமையாகக்கற்றவர். பிரவேசம், மெட்ரிக், எப்.ஏ.,பி.ஏ., தேறி 22வது வயதில் திருவனந்தபுரம் மகாராசா கல்லூரியில் ஆசிரியரானார். பணியில் இருந்து கொண்டே எம்.ஏ. தேறினார். செர்மனியில் ஒரு ஆறுமாதம் தங்கியிருக்கும் வாய்ப்பு நேர்ந்திருந்தால், டாக்டர் பட்டமும் பெற்றிருப்பார். வரலாற்றாசிரியர், முதல்வர், பிறவகைச் சிராஸ்தார், தத்துவப் பேராசிரியர் எனப் பணிபுரிந்தார்.

இவர் அடிப்படையில் வரலாற்று ஆய்வாளர், தத்துவ சிந்தனையாளர், படைப்பாளர். தம்முடைய ஆசிரியரான ராபர்ட் ஹார்வியிடம் ஆங்கிலேயத் தத்துவங்களை அறிந்தார்; ஞானகுருவான கோடகநல்லூர் சுந்தர சுவாமிகளிடம் இந்தியத் தத்துவங்களைக் கேட்டார்; வேதாந்தம் மற்றும் அநுபூதி ஞானம் கைவரப்பெற்றார்.



படிப்பகம்

www.padippakam.com

திருமுரு காற்றுப்படை, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, பழந்தமிழ் நூல்களை ஆங்கில உரைநடையில் எழுதினார்.

திருஞானசம்பந்தர் காலம், பத்துப் பாட்டு, முற்காலத்திரு விதாங்கூர் அரசர், ஆறாம் நூற்றாண்டுத் திருவிதாங்கூர் அரசர், திருவிதாங்கூர் கல்வெட்டுகள் பற்றி ஆய்வுகளை ஆங்கிலத்தில் தந்தார்.

நூற்றொகை விளக்கம், நம்பி யாண்டார் நம்பிகாலம், பொதுப் பள்ளி எழுச்சி, நற்றாயின் புலம்பல், சிவகாமி சரிதம், மனோன் மணீயம் ஆகிய நூல், ஆய்வு, படைப்பிலக்கியங்களைத் தமிழில் அளித்தார்.

பிரிட்டிஷ் ரெஸிடண்ட் எச்.பி.கிரிக் ஒப்புதல் பெற்றுக் கல்வெட்டு ஆய்வுக்கழகத்தை நிறுவினார்.

சைவச்சான்றோர் கூட்டுறவு கொண்டு ஒரு கட்டிடம் கட்டி, அதில் சைவப் பிரகாச சபை ஏற்படுத்தினார்.

வரலாற்று ஆய்வுத்திறன் காரணமாக அரசுக்குரிய வரலாற்று ஆய்வுக் கழக உறுப்பினராக (Fellow of Royal Historical Society),அரசுக்குரிய ஆசிய ஆய்வுக் கழக உறுப்பினராகவும் அங்கீகரிக்கப்பட்டார். சென்னைப் பல்கலைக்கழக உறுப்பினராக (Fellow of Madras University) விளங்கினார். இவருடைய குடிமைப்பண்புகளுக்காக அரசு ராய் பகதூர் விருதினை அளித்தது.

சுந்தனார் தம் வாழ்வுக் காலத்தில் எம்.ஏ.சுந்தரம் பிள்ளை, ராய்பகதூர் சுந்தரம் பிள்ளை எனச் சிறப்பாக பேசப்பட்டார். கல்வி உலகில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை எனப் புகழப்பட்டார்.

இன்று மனோன்மணீயம் சுந்தரனார் எனப் போற்றப்படுகிறார்.

இவருக்குப் பூர்வீகத்திலிருந்தே சொத்து, செல்வம் நிறைந்திருந்தன. தம் காலத்தில் பலஏக்கர் நிலம், வீடு, வாசல் என மேலும் சேர்த்து வைத்தார். குதிரை, சாரட் வாகன வசதிகளும் கூடிக்கொண்டன. திருவனந்தபுரம் பேரூர்க்கடையில் பெரிய மாளிகை கட்டி, ஹார்வி புரம் எனத் தம் ஆசிரியர் பெயர் சூட்டி அதில் வாழ்ந்தார்.

அப்போது திருவனந்தபுரம் அரசராய் இருந்த ஸ்ரீமூலம் திருநாள் மகாராசாவின் நெஞ்சத்தில் செல்வாக்கான இடமும் பெற்றிருந்தார்.

செர்மானிய காண்ட், ஹெகல் தத்துவங்களில் பேரா. சுந்தரனார் தெளிவு பெற்றிருந்தார்; ஜே.எஸ். மில்,ஹெர்பர்ட் ஸ்பென்சர் பிரசாரம் செய்த நேர்க்காட்சிவாதம் உணர்ந்திருந்தார். மேலும் பர்க்லி பாதிரியார் தத்துவத்தில் தேர்ச்சி பெற்றிருந்த அலெக்சாண்டர் காம்பெல் பிரேசருடனும், கிறித்துவ



படிப்பகம்

www.padippakam.com

இறையியலாளரான ஜேம்ஸ் மார்ட்டினோ உடனும் கடிதத் தொடர்பு கொண்டு தத்துவ உரையாடல் நடத்தினார்; அப்போது தமது வேதாந்த, அநுபூதி உணர்வுகளை அவர்களுக்குப் புலப்படுத்தினார்; கூடவே அவர்கள் சிந்தனைகளையும் அறிந்தார்; ஆனால் சமரசப்பட்டுக் கொள்ளவில்லை.

மேலும் ஆல்ஃபிரட் ரஸ்ஸல் வாலஸ் எழுதிய நூல் மூலமாக டர்ர்வினியத்தைத் தெரிந்திருந்தார். லூயிஸ் ஹென்றி மார்க்கனின் பண்டைக்காலச் சமூகம் நூலைக் கற்றிருந்தார். உயிர்கள் மற்றும் சமூகம் பற்றிய பரிணாம வரலாற்றை ஏற்றிருந்தார்.

இப்படியெல்லாம் அறிவு வளம் பெற்று விளங்கிய பேரா.சுந்தரனார் எல்லாமான கடவுள் பிரபஞ்ச வடிவிலும், இயற்கைப் பொருள்கள் இயக்க நிலையிலும் தன்னைத்தானே விளக்கியும், விளக்குவித்துக் கொண்டும் உள்ளது என்று தமது வேதாந்தத்தைப் புதுமையாக்கிக் கொண்டார். இந்தக் கடவுளின் கருணை எல்லாமாக உள்ளது; இது வெற்றி உறுவதாகத் தமது மனோன்மணீயம் நாடகத்துள் சித்தரித்தார்.

மார்க்ஸ், எங்கெல்ஸ் தத்துவம் (இளம் ஹெகலியர்கள் என்ற அளவில் கூட) பேரா. சுந்தரனாருக்குக் கிடைக்கவில்லை; எனினும் ஹாப்ஸ், ஸ்பினோசா போன்ற பொருள் முதல்வாதிகளை அறிந்திருந்தார். ஆனால் ஜே.எஸ்.மில்,, ஹெர்பர்ட் ஸ்பென்சர் போன்றோரையே உண்மையான பொருள் முதல்வாதிகளாகக் கொண்டு, சுயநலம் மிகுந்த நாத்திகர்களாகவும் மதிப்பீடு செய்திருந்தார். இந்தச் சுயநல நாத்திகம் தோல்வி உறுவதாகத் தமது மனோன்மணீயம் நாடகத்துள் சித்தரித்தார்.

### சாதனைகள்

1. 1885இல் பேரா. சுந்தரனார் அப்போது இங்குக் கற்கப்பட்ட விஞ்ஞான நூல்களைத் தமது வேதாந்த நோக்கில் முறைப்படுத்தி விளக்கி ஒரு சொற்பொழிவு செய்தார். தத்துவம், கணிதம், விஞ்ஞானநூல்கள், பூகோள, வானநூல்கள், தர்க்கம், அறம், மருத்துவநூல்கள், இசைமுதலான கலைநூல்களை ஒரு மண்டலப் படுத்தி விளக்கினார். ''நூற்றொகை விளக்கம்'' என நூலாக வெளியிட்டார்.

காலம், இடம், பொருள், இயக்கம் என்ற நூதன நோக்கில் அதில் அணுகினார். பொருளானது இடத்தொடு தொடர்பு கொண்டிருப்பதாலேயே அதற்கு அளவுகள் ஏற்படுகின்றன என்ற அவரது கருத்தியல் பொருள்பற்றிய அறிவு வரலாற்றில் ஒளிவீசுவது ஆகும். அந்த நூல் ஒரு சாதனை. இதுபோன்று மற்ற தத்துவ வாதிகள் செய்யவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

*2. 1891* இல் திருஞானசம்பந்தர் காலத்தைக் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதி எனத் தக்க சான்றுகளுடன் நிறுவினார். கால்டுவெல் போன்றோர் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முன் தமிழில் இலக்கியம் இல்லை என்றனர்; அதை முறியடித்தார். பிறகு தமிழக வரலாற்றின் அனைத்துத் துறைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டன. இது அவரது சாதனையின் விளைவு.

*1894* இல் கல்வெட்டு ஆதாரங்களைக்கொண்டு திருவிதாங்கூர் அரசர் வரலாற்றை முழுமைப் படுத்தினார். தமது பங்கிற்கு 14 கல்வெட்டுக்களைக் கண்டு பிடித்து எழுதினார். இவையும் சாதனைகள்.

இதன்பொருட்டு ரூ.11,000 சன்மானம் பெற்றார்; ஆயினும் அதை ஸ்ரீபத்மநாபநாத சுவாமி கோவிலுக்கு அளித்துவிட்டார்.

*3. 1891* இல் மனோன்மணீயம் நாடகத்தை வெளியிட்டார். கோடகநல்லூர் சுந்தர சுவாமிகளிடம் பெருந்திரட்டு, பிரம்மகீதை, ஞான வாசிட்டம் காட்டும் அத்வைத நுட்பங்களைக் கற்றார்; பரமாத்து விதம் என்ற வேதாந்த ஞானத்தை உணர்ந்தார். மற்றபடி அரங்கசாமி அய்யங்கார் கருதியது போன்று பேரா. சுந்தரனார் சைவ சித்தாந்தி அல்லர். சைவசித்தாந்த ஆசிரியரான அருள்நந்தி சிவாச்சாரியார் ஒருவிட்டுக் கொடுக்காத இருமைவாதி எனவும், பரமாத்து வித ஆசிரியரான தத்துவ ராயர் சுத்தமான வேதாந்தி எனவும் பேரா. சுந்தரனார் மதிப்பீடும் கொண்டிருந்தார். இந்தப் பரமாத்துவித வேதாந்தத்தையே உட்பொருளாக வைத்து மனோன்மணீயம் நாடகத்தைப் படைத்தார்.

மேலும் வருணாசிரம முறையை ஒதுக்கித் தமிழர், திராவிடர் நிலையில் எல்லாப் பாத்திரங்களும் படைக்கப்பட்டுள்ளனர்; முழுவதும் சைவ வேளாளர்களே. 1892 இல் சைவப் பிரகாச சபைக்கு விவேகானந்தர் வருகை தந்தபோது பேரா. சுந்தரனார் தம்மைத் திராவிடர் என்றும், இந்து அல்லர் என்றும் குறிப்பிட்டுக்கூறிய நிகழ்ச்சி நினைப்பதற்குரியது.

இருந்தாலும் ''நீராரும் கடலுடுத்த'' என்று தொடங்கும் மனோன்மணீயத் தமிழ்த் தெய்வ வாழ்த்துப் பாடலில் பேரா. சுந்தரனாரின் சிந்தனை முறை குறிப்பிடத்தக்கது. உலகம், பரதகண்டம், தெக்கணம், திராவிட நாடு (தமிழ்நாடு), தமிழ் எனப் பொதுமையிலிருந்து தனிப் பட்டதற்கு வரிசைப்படுத்தி, தமிழ் மணம் உலகெல்லாம் கமழ்கின்றது எனத் தனிப்பட்டதிலிருந்து பொதுவாக்கிக் காட்டுகிறார். எல்லாப் பொருள்களும் கடவுளில் நிலவுகின்றன; கடவுள்



படிப்பகம்

www.padippakam.com

எல்லாவற்றிலும் புகுந்து விளங்குகிறார் என்ற ஈசாவாஸ்ய உபநிடதம் புலப்படுத்தும் பொருளும், சிந்தனை முறையும் இது. இது பரமாத்துவித வேதாந்தம்; இதைத் சார்ந்து அந்தத் தமிழ்த் தெய்வ வணக்கம் அமைந்துள்ளது.

இந்த வேதாந்தப்பார்வையில் அவர் காலத்தில் பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்பட்ட மேல் நாட்டு அறிவியல், இறையியல், தத்துவவியல் கருத்தியல்களைப் பரிசீலித்துத் தமது தத்துவத்தை நவீனப்படுத்தினார். இதனைத் தாமியற்றிய மனோன்மணீயத்துள் புலப்படுத்தினார். மேலும் அன்றைய ஆத்திகம், நாத்திகம், ஆன்மிகம் ஆகிவற்றின் அப்போதைய வளர்ச்சிகளையும் அதனுள் சித்தரித்தார். அந்த முறையில் அந்நாடகம் ஒரு சாதனை.

செம்மாந்தநிலை

பேரா. சுந்தரனார் 1857 முதல் விடுதலைப் போருக்குப் பிறகு ஆங்கிலேயர் ஆட்சியில் கல்வி மற்றும் வாழ்வு நிலைமைகளில் ஏற்பட்ட வசதிகளை முழுமையாக அனுசரித்து வளர்ந்தவர். கூடவே சைவ வேளாளர் என்ற மேம்பாட்டு உணர்வுடன் தமிழுலகில் வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

தேசிய இயக்கம் உருவாகிக் கொண்டு வந்த அந்தக் காலத்தில் மொழி அபிமானம், தேச அபிமானங்களை இனப்பற்றோடு புலப்படுத்தினார். அதனால் தமிழ் மக்களிடையே மொழிமற்றும் நாட்டினப்பற்றுகளுடன் இயக்கங்கள் தோன்ற உள்ளொளியாய்த் திகழ்ந்தார்.

இவருடைய வேதாந்த சிந்தனைகளை மொழி, நாட்டு அபிமானங்களைப் பாரதியார், கோ.வடிவேலு செட்டியார், பேரா.வையாபுரிப்பிள்ளை, தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் முன்னெடுத்துச் சென்றதோடு தேசிய இயக்கத்திலும் பொலிவு பெறச்செய்தனர்.

இந்திய சுதந்தரப் போராட்டம் வீறு கொண்டபோது பேரா.சுந்தரனாருடைய மகன் நடராசன் 34-வது வயதில் மகாராசா சமஸ்தான எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னணியில் நின்றார். இதுகண்ட ஆங்கில அரசு அவருடைய சொத்துக்கள் அனைத்தையும் பறிமுதல் செய்துவிட்டது; ஆதலால் அவர் ஓலைக் குடிசையில் வாழநேரிட்டது. அப்போதும் அவர் வைராக்கியமான தேசிய ஆன்ம ஒளியோடு வாழ்ந்தார்.

இப்படியாகப் பேரா. சுந்தரனார் அதி உன்னத வாரிசுச் செல்வத்தையும், வீறார்ந்த இயக்கத் தொடர்ச்சிகளையும் கொண்டு வரலாற்றில் செம்மாந்த நிலையில் திகழ்ந்து கொண்டுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

# கோலம்

ச.சரவணன்

சித்திரத்திலிருக்கும்
ஆன்மா
பாதசாரிக்கும் தெரியும்
அதிகாலையில்
கோட்டுச்சித்திரத்தின்
ஆயத்தமாய் புள்ளிகளிட்டு
வளையல்கள் ஓசையெழுப்ப
சிறைபடுத்திக்கொண்டேவரும் விரல்கள்
முறையற்ற கோடுகள் தெரியும்போது:
கால்களுக்கடியில் மிதிபடும் போதும்
இயல்பாகவே தெரியும்
சிரத்தையுடன் ஓரங்கள் திருத்தி
லயித்துப் போகும் மனது
பொழுதுபுலர்ந்ததும்
அழிபட்டுப்போகும் கோடுகள்
மறுபடிமறுபடியும்
சித்திரம் தீட்டுதல்தொடரும்
சித்திரத்திலிருக்கும் ஆன்மாவும்
பாதசாரிக்கு தெரியும்

தாமரை மே'97/11

படிப்பகம்

www.padippakam.com

# மாயக்கல் தேடி பதுங்கும் உருவங்கள்

சு. வேணுகோபால்

முதல் தட்டில் எதுவும் இல்லை. மறுபடி "மூக்கம்மா" பெயர் சொல்லி தட்டியதும் "ஓய் யாரு" ஓசையோடு சில நொடி நகர்ந்து கதவு திறந்தது. வெளிர்ந்த தெரு இருட்டில் இருவர் நின்றிருந்தார்கள்.

"என்ன சாமியோவ் நீங்க? யாரும் செத்திட்டாங்களா?"

"உள்ள வா"

திக்கிருட்டு வீட்டுக்குள் ரகசியத்தைக் கொண்டு சென்றார்கள். பன்றிக் குத் தவுடு வைக்கும் மரத்தொட்டியில் உக்கார்ந்து கொண்டார்கள். பட்டியில் 'கெர் கெர் கீச்ச் கீச்ச்' பன்றிகளின் சண்டைக்குரல். அர்த்த ராத்திரியில் மூக்கம்மாவை எழுப்புவது அதிசயமில்லை. இப்போது ஒப்பாரிவைக்க யாருக்குத் தெரிகிறது? மூக்கம்மாதான் எந்த இழவென்றா லும் மாரடித்துப் பாடுகிறாள். அவளும் போய்விட்டால்? ஒப்பாரியின் மூச்சும் முடிந்துவிடும்.

"என்ன சாமி இந்த நேரத்தில"

"மூக்கம்மா ஜக்கனன் எங்க"

"தூங்குது சாமி. சாயந்திரம் லோடா குடிச்சிட்டு வந்துச்சு. மூதேவியாட்டம் படுத்திருக்கு..."

"இல்ல ஒரு விசயம்"

"சொல்லுங்க சாமி"

"ஒம் மகன் எறந்த பின்னாடி ஒனக்கு எதாவது தோற்றம் பட்டுச்சா"

மகன் என்றதும் ரகசியப்புனுகு தலை நீட்டியது. லத்திகள் தொங்கும் கரங்கள் எழுந்து வந்தன. எதைச் சொல்வது? மனமெங்கும் அசிங்கத்தின் மிதப்பு.

"எறந்தப்ப கெனாவில வந்திருக்கான் சாமி"

"எப்படி வந்தான்"



படிப்பகம்

www.padippakam.com

''மறந்திட்டேன் சாமி''

''கொஞ்சம் நினச்சுப்பாரு''

பீடி பற்றவைத்தான் முத்துராசு. தலைக்கு மேலே அலைந்து பறக்கும் வௌவால்கள். குப்பென்று பூத்தது விதவிதமான நினைவுகள். நிதானிக்க முடியாத சாயைகள்.

''ஆங். கயிறு வழியா ரத்தம் போறது மாதிரி ஒருநா கனவுல வந்துச்சு. முழுசா ஞாபகம் வரமாட்டெங்கிது சாமி'' பயமுறுத்திய ரகசியத்தை மூக்கம்மாவிடம் காதோடு அமுங்கிய குரலில் பேச நெருங்கி உட்கார்ந்தார்கள். நடந்தது இதுதான்:

தடதட தவ்வலில் ரம்பத்தின் பற்கள் அடிபாக பெருந்தண்டில் முதல் உராய்வை முழுமையாக நிகழ்த்தவில்லை. மூச்சு முட்டும் ஊமை முணகல் புளியமரத்தில் கிளம்பியது. கோடாலி வெட்டோசை காட்டிக் கொடுத்துவிடும் என்பதால் ரம்பத்தைக் கொண்டு வந்திருந்தான் பிச்சை. லேசாக வேர்த்தது. மறுபடி ஒரு இழுப்பு இழுத்து தள்ளியதும் வாய்நிறைய துணிப்பந்து திணித்திருப்பவனின் உறுமல்.

போக்குவரத்தற்ற பெரும் வானாம்பாரி நிலப்பரப்பின் வண்டிப்பாதை கரை மீது நின்றிருந்தது புளியமரம். ஆள் அரவமற்ற நடு ஜாமம்... காலவாசல் முத்துராசு அடித்தண்டு அறுத்து முடிய கட்டை வண்டியோடு வந்துவிடுவதாக சொல்லியிருந்தான். இப்படித் திருட்டுத்தனமாக மரமறுத்து சிக்கிய கேசுகள் இன்னும் இரண்டு முடியவில்லை முத்துராசுக்கு. கேசு ஒரு பக்கம் இருந்தாலும் காலவாசலுக்கு திருடும் மர அறுப்பை அவன் நிறுத்திக் கொள்ளவில்லை.

பிச்சை கொண்டு வந்திருந்த கனங்கை குச்சியை எடுத்து கட்டு காப்பில் தட்டிப் பார்த்தான். பூச்சி பொட்டு சரசரப்பு இல்லை. சற்று தள்ளி நின்று பார்த்தான். கிளைகளில் பசுமாடுகளின் 'மாசு' ஓலை கொட்டகைகளில் தொங்கின. அவை கறுத்து இத்துவிழும் நிலையில் இருந்தன. முத்துராசுக்காக எத்தனையோ மரத்திருட்டிற்கு சென்றதுண்டு. வினோத முணகல் வந்ததில்லை. பகலில் கூட நடமாட்டமில்லாத பகுதி அது. எங்கோ நரி ஊளையிடும் ஓசை வந்தது. ஓசை நெருங்கிக் கொண்டே பருத்தது. 'பிச்சையனா பயப்படுறது' தனக்குத் தானே தைரியமூட்டிக் கொண்டு ரம்பத்தை மறுபடி உராயவிட்டான். ரத்தக் கசிவோடு கெர்கெ ; ஓசை கிளம்பியது. ரம்பத்தைத் தனியாக எடுத்தான். பற்களில் மினுமினுத்தது ரத்தம்.

பூ பூத்து பிஞ்சிறங்கும் தலையாடி சமயம். தீக்குச்சியை உரசி அடிமரத்தில் வைத்துப் பார்த்தான். வழியும் ரத்தத்தில் மொய்க்கும் எறும்புகள். ரத்தம் புளிப்பு வாசத்தை கிளப்பியது. பிச்சையனுக்கு, தெக்காபபுல போகும்



படிப்பகம்

www.padippakam.com

அடிகொப்பில் வரிந்துகட்டிய வேட்டியில் பெத்தன கொம்பன் தொங்கும் தோற்றம் காட்டியது. வெறும் பிரமை என்றுபட்டாலும் கைகள் நடுங்கின.

ரம்பத்தை சாக்கில் திணித்து வேகமாக நடந்தான். திரும்பிப் பார்க்க அச்சமாக இருந்தது. பின் தொடரும் காலடி ஓசை...? சற்று மெதுவாக மிதித்து காதை தீட்டினான். அப்படியொன்றும் இல்லை. குறுக்காக உழவுகாட்டில் விழுந்து வேகமாக நடந்து பழனிச்சாமி கவுண்டர் தோட்டகத்தாழை கடவை தாண்டினான்.

நான்கு வருசத்திற்கு முன் சிலமலைக்கு சைக்கிளிலே விறகுப் பேட்டை சிவானந்தத்தை பார்க்கப் போயிருந்தான். திரும்ப வரும் போது மேங்காலில் சூரிய வெப்பம் தகித்தது. சைக்கிளை ஒத்தையடிப்பாதை வழியாக விட்டான். காய்ந்த மணல் ஓடையில் சைக்கிளைத் தூக்கி சுமந்து கருப்பசாமி குத்துக்கல்லிலிருந்து வரப்பு வழியாக உருட்டி... வண்டிப் பாதை வந்தபோது சட்டை உடலோடு ஒட்டிக் கொண்டது.

புளியமரம் வரும் வரை கொஞ்ச நேரம் தங்கிப் போக வேண்டும் என்று தோன்றவில்லை. சைக்கிளை நிறுத்திவிட்டு சட்டையை கழற்றி கழுத்துக்கு நேராக சுழற்றி வீசினான். சட்டையை கேண்டில்பாரில் போட்டுவிட்டு துதிக்கை போல் பூமிக்குள் நுழையும் பருத்த வேரில் உட்கார்ந்து பிடி பற்ற வைத்தான். தரையில் பொட்டு பொட்டுவென்று கருந்துளி விழுந்தது. தேன் கூடு கனிந்து விழுகிறதா என்று தலைதூக்கியபோது உடல் ஊதி துருத்திய நாக்கோடு உருவம் தொங்கியது. ஊன் கனிந்து விழுந்து கொண்டே இருந்தது.

ரோட்டில் ஏறியதும் வெகு தூரத்தில் கடக்முடக் வண்டிச் சத்தம். ஓசை வரும் திசை நோக்கி கால்கள் இயங்கின. வண்டியை நெருங்கும் போது மாட்டின் பளிங்குக் கண்கள் தெரிந்தன. நின்ற மாடுகள் அசை போட்ட வண்ணம் இருந்தன.

''என்ன பிச்ச. ஆளெதும் சுத்திட்டானுகளா''

''இல்லப்பா மொதல்ல வண்டியத் திருப்பு''

''என்னாச்சு''

''ஒண்ணுமில்ல திருப்பு சொல்றேன்''

வண்டியில் முத்துராசுவோடு இருந்த இரண்டு பேரும் இறங்கினார்கள். நடுங்கும் உடலைக் கண்டு பதறினார்கள். ''ரம்பத்த போட்டதும் முணகலோட ரத்தம் வருது முத்து''. ''ஏய், என்னாப்பா கேனத்தனமா பேசுற. சரி வா போய் பார்ப்போம்'' ''வேணாம் முத்து''

சாக்கில் கிடந்த ரம்பத்தை உருவி பார் சட்டத்தில் வைத்தான். குமிழாக எரியும் மஞ்சள் தீயில் தெரிந்தது உறைந்த ரத்தம். மறு



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

படியும் ஒரு தீக்குச்சி பொறுத்தி பார்த்தார்கள். ஒன்றும் பேசாமல் வண்டியைத் திருப்பினார்கள்.

காலவாசலில் வண்டியை அவுத்துப் போட்டு ஊருக்குக் கிளம்பினார்கள். மர அறுப்புக்கு வந்த இருவரும் காலவாசல் குடிசையில் படுத்துக் கொண்டார்கள். "மூக்கம்மா சொம்பச்சியிடம் எதாவது கண்ணிக்கு தோற்றம் காமுச்சான்னு கேட்டா என்ன" திடீரென்று முத்துவுக்கு இப்படியொரு யோசனை தோன்றவும் விர்ரென்று மந்தக் குளத்தில் விழுந்து மூக்கம்மா வீட்டை தட்டியது.

நாய் குரைப்பு அதிகமாக இருந்தது. அவர்கள் போன பின்பு தூக்கம் வரவில்லை. 'கருமாந்திரம் பண்ணாததால் கோவஆவியாக மாறியிருக்கும்' முத்துராசு சொன்னது நிசம்தானா? அன்னக்கே சொன்னேன். மொறையா கருமாந்திரம் பண்ணனுமுன்னு மனுசன் கேட்டாதானே? எட வெட்டு சாவுக்கு எல்லோரும் வேண்டாம் என்று தடுத்து விட்டார்களே! 'பெத்தனா' மெதுவாக சொன்னாள்.

ஜக்கனன் விடும் குரட்டை தூக்கச் சடவையும் விரட்டியது. பன்றித்தொழு ஓரத்தில் உள்ள திண்ணையில் மகள் மல்லாந்து தூங்கிக் கொண்டிருந்தாள். பதிமூன்று வயது நடப்பு .பரட்டை தலை; ஊளைமூக்குமாக கிடந்தாள். பக்கத்தில் தம்பி.

குட்டையான சொவுலு ஆண் பன்றி பெரிய மாரடிவெள்ள பெண் பன்றி மீது சவாரி ஏறியது. ஜாதிபன்றி அவ்வளவு சூட்டா விழாது. சவ்வாரியில் தூங்கும். ஆக்ராவ நீட்டிச்சன்னா சத்தன்னு எகுறும். புனல் மூக்கில் நுர் நுர் ஒலி. விதைபனங்கொட்டை. பிடறி மயிர் கருங்கம்பி. தண்டு ஆக்ரா. பூமியைத் துளைக்கும் சில.புழுதி படிந்த எச்சமற்ற தொழு.

இதே போல் முன் ஜாமத்தில் தான் போலீஸ் அடித்து ஜீப்பில் ஏறச்சொன்னது. ஜக்கனன் வண்டமேருக்கு சவுரி விற்க போயிருந்தான். "எதுக்கு சாமி? நாங்க என்ன தப்பு பண்ணுனோம்..." "ஏறுடி. கொழுப்பு ஏறிப் போச்சா? வரவர இந்த சொம்பன்களுக்கு திமிர் ஏறி போச்சு. ஏர்றா" பெத்தனனை பிடறியில் ஒரு வாங்கு வாங்கி ஏற்றினார்கள். பதினைந்து வயது அப்போது அவனுக்கு. அது ஒரு வெள்ளிக்கிழமை இரவு என்பது இன்னமும் ஞாபகம்.

இன்று சாயந்திரம் பரவுகாவல்காரம் பதினைந்து ரூபாய் கேட்டது... மசங்க முன்னோடும் பன்றிகளுக்குப் பின் நடந்து வந்த போது... சே! என்ன வாழ்க்கை? வெங்கட நாயக்கருக்கு அழகா? திண்டு முண்டா குடித்துவிட்டு கை விரித்து நடுரோட்டில் மரித்து நின்றார். ஊரிலே பெரிய அரசியல்வாதி. குனிந்து தப்பிக்கவும் எப்படியோ ராவி கை பிடித்து ப்பீ மந்தைக்குள் இழுத்தார். எப்படியோ



படிப்பகம்

www.padippakam.com

விசும்பி தப்பித்து வந்தது; முனி யாண்டி விலாஸ்காரர் பன்றிக்கறி கேட்டிருப்பது; மூன்று நாள் பெத்தனன் காணாது அலைந்து பின் தொங்கும் உடல் கண்ட போது நடுக்கமாய் இருந்தது; கயிற்றை வெட்ட பூமியில் விழுந்த உடல் வெடித்து குலைந் தது; வேடிக்கைப் பார்த்திருந்த கூட்டம் மூக்கைப் பொத்தி பின் நகர்ந்தது; வானத்தில் கரைந்த காகங்கள்; லத்தி சுழற்றி மிரட்டிய போலீஸ்கள், ஒப்புக்கு சப்பாக குறித்துப் போனது; ஏதேதோ குறுக்குமறுக்காக வந்து மோதின.

அறையில் அடைத்ததும் மீசை வைத்த கருத்த போலீஸ் "எங்கடா வச்சிருக்க ஸ்டாட்டர் பெட்டி" எத்தியவண்ணம் கேட்டான். எதுவும் விளங்கவில்லை. சட் டையை கழற்றச் சொன்னது போலீஸ். வெற்றுடம்பில் இரண்டு அடி விழுந்தது.

அதற்கு ஆறுமாசம் முந்தி பெத்தனன் சின்னச்சாமி தோட்ட 'கேட்பால்' திருடி பழைய இரும் புக்கடையில் விற்றுவிட்டான். துப்புதுலக்கி பெத்தனன் பிடிபட்டதும் முதலில் ஒத்துக் கொள்ளவில்லை. போஸ்ட் மரத் தில் கட்டி சாட்டக் குச்சியில் நான்கு வப்பு வச்சதும் ஒத்துக் கொண் டான். 'ரிஞ்சுபோட்டாலும் கழட்ட முடியாததை எப்படி கழட் டுன" சின்னச்சாமி மடாரென்று நெஞ்சில் அடித்துக் கேட்டார். 'சருக பந்தாகட்டி தீ வச்சேன் சாமி. கேட்பால சுத்தி வாட்டினேன். இப்பிடீன்னு திருகுனதும் வந்தி டுச்சு' ரெண்டு குத்து விழுந்தது... "அடேங்கப்பா இந்த நேக்கு யாருக்குத் தெரியும்" கூட்டத்துள் முளைத்தது. ஐநூறு ரூபாய் அப ராதம் கட்டி 'இனி திருட மாட் டேன்' என்று முறிவைத்து மீட்டிக் கொண்டு வந்தது நெஞ்சில் மிதந்தது.

அதிலிருந்து ஒழுக்கமாகத்தான் இருந்தான். "ஸ்டாட்டரை நா திருடலயம் மேய்" போலீஸ் அடிதாங்காமல் கத்தினான். அன் றிரவு அது அதோடு முடிந்தது. "தூங்குனீங்க படவா அவ் வளவுதான்" காலையில வச்சுக்கி ரேண்டி போலீஸ் சொல்லிவிட்டுப் போனது. தன் மடியில் படுத்துக் கொண்டு "ஐக்கம்மா சத்தியமா திருடலயம்மேய்" அழும் விக்கலில் திரும்பத் திரும்ப சொன்னான். விடியக்காலையில் எப்படி தூக்கம் அமுக்கியது என்று தெரியவில்லை. "ஏண்டி சொகுசா தூக்கம் வருதோ" தடியின் ஓசை பின்புறத்தில் சுரீரிட்டது. அலறி எழுந்தபோது போலீஸ்காரர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

மறுநாள் உச்சிமதியம் வரை சாப்பாடு இல்லை. சின்னச்சாமி வந்ததும் "ஒத்துக்கிட்டானா?" ஆர்வமாக ஏட்டிடம் கேட்டார். "இன்னிக்கி ராத்திரி ஒத்துக்கிரு வான். ஒத்துக்கில்லையன்னா அவன் ஆத்தாளுக்கும் ரெண்டு வச்சா சரியாயிரும். ஜாலம்பன்



படிப்பகம்

றானே'' வராந்தாவில் சத்தம் போட்டு பேசினார். அறைக்கு சின்னச்சாமி வந்து மிரட்டினார். ''ஏண்டா சும்பநாயி ஒனக்கு இதே தொழிலா போச்சா? ஒத்துக்கில்ல பிட்டி பிதுங்கிடும்'' ''சாமி, நா திருடல சாமி'' கம்பியைப் பிடித்துக் கொண்டு அழுதான். சின்னச்சாமி 'பாசாங்கா பண்ற' உறுமி விட்டுத் திரும்பினார். போலீஸ் நகத்தைச் சூண்டியதும் நூறு ரூபாய் தாளை திணித்துவிட்டு கிளம்பினார்.

மதியத்திற்குமேல் எதிர்த்த அறைக்கி யாரையோ கொண்டு வந்தார்கள். கூட்டமாக இருந்தது. யாரையோ கையை வெட்டி விட்டதாக பேச்சு வந்தது. முப்பது வயதிருக்கும். போலீஸ் சிகரெட் பெட்டியை நீட்ட அவன் தட்டி விட்டான். போலீஸ் ''கொஞ்சம் அஜஸ்பண்ணுங்க சார். எதிர் பார்ட்டிய ஐயா மிரட்ட இங்கயே சரி பண்ணிடுவாரு...'' நீண்ட நேரம் தாஜா பண்ணினார். இறுக்கமான புட்டமும் தொந்தியுள்ள ஏட்டு டிபன் கேரியரைக் கொடுத்து சாப்பிட சொன்னார். கோழிக்கறிவாசம் கமகமத்தது. போலீஸ் பரபரப்பாக செயல்பட்டார்கள்.

மூன்று மணிக்கு ரெண்டு பொட்டனத்தை தூக்கி எறிந்தார்கள். அழுக்கேறிய போனியில் மஞ்சள் நீர். வாய் வைத்ததும் உப்புக் கரித்தது. யாருடைய மூத்தரமோ? ரெண்டு மணி நேரம் கூட இருக்காது. ஸ்டேசனுக்குள் கூட்டம். எதிர் அறையில் இருந்தவன் தோளை ஏட்டு தட்டி ''மத்தத நாங்க பாத்துக்கிறோம்'' சிரித்த வண்ணம் அழைத்துக் கொண்டு நகர்ந்தார். காக்கி ஏதோ சொல்ல ''கவனிக்கிறேன்'' குறுஞ்சிரிப்போடு அவனின் உதடுகள் அசைந்தன. போலீஸ்களின் முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது.

சனிக்கிழமை இரவு தூங்கி விழும்போதெல்லாம் உசிப்பிவிட வேண்டியதாகிவிட்டது. அவனுக்கு எது நடந்தாலும் தூக்க மனம் ஏங்கியது. தனக்கு தூக்கம் கவியும் போது பயம் கவ்வியது. உடலின் சுகமான விசயமே தூக்கம் தான். மிருதுவான ஓய்வு.

''யம்மேய் ஏன் தூங்கக் கூடாது''

''தெரியலையே''

வெளிச்சம் பளிச்சிட்டதும் இரண்டு போலீஸ் நின்றிருந்தார்கள். பெத்தனனிடம் பிய்ந்த பூட்சை கொடுத்து அடிக்கச் சொன்னார்கள். தயங்கினான். ''ஙொத்தாள அடிறா தாயோளி'' மொனியில் லத்தியால் போட்டதும் அழுதான். ''அடிறா'' ஓங்கியதும் கன்னத்தில் அடித்தான். பூட்சை கொடுத்து மகனை அடிக்கச் சொன்னதும் போலீஸ் காலை பிடித்தும் என்ன மரியாதை? எத்துதான் விழுந்தது.

'சொல்றா உண்மைய, இல்ல பிச்சுப் போடுவேன்''



படிப்பகம்

www.padippakam.com

''சாமி, எனக்குத் தெரியாது சாமி'' பெத்தனனின் கைகள் நடுங்கின.

ஒரு முழ வேட்டிக்குள் இருந்த டவுசரையும் உருவி எடுத்தார்கள். அவன் மர்ம ஸ்தானத்தை மறைத்தான். சேலையை உருவினார்கள். ஓடிப் போய் மூலையில் உக்கார்ந்து உடலை மறைக்க முயன்றும் முடியவில்லை.

''போடா ஒங் ஙொத்தாள ஜோலிபண்ணு''

அலறினான் லபலபவென்று. கையெடுத்து கும்பிட தள்ளி விட்டார்கள். மனதில் பயங்கர பயம் தவிர எதுவும் இல்லை. ''கத்துன கொன்னுடுவோம்'' ஊசியால் சுசனத்தில் குத்தி ''ஜோலி பண்ணு'' கண்களைத் திரட்டினார்கள். மறுபடி குத்தவிடாமல் மறைத்தான் சுசனத்தை. கைகளைப் பிடித்துக் கொண்டதும் சுசனத்தில் ஊசி இறங்கியது.

அழுதவண்ணம் மேலே விழுந்தான் பெத்தனன். அவன் குழந்தையாகி ஒட்டுவதுபோல் இருந்தது. கண்களை மூடி மூச்சடக்கி இறுகிய முகத்திலே கட்டளை நிறைவேற... பின் ஆடை களைந்து மாறிமாறி தாவிய போலீஸ் தடியன்கள்...

மனம் விட்டு ஒப்பாரி வைக்க முடியவில்லை. பன்றியின் உறுமல் எழுந்தது. சீராகவரும் ஜக்கனனின் குரட்டை ஒலி. நெஞ்சுக்குவடு துடிதுடிக்க கண்கள் கலங்கின.

*நீல குளதங்கரை-நாங்க*
*நின்னழுவும் மந்தக்கரை*
*நின்னழுது வீடு வந்தா*
*நீரு தண்ணி யார் கொடுப்பா*
*தூரத்தே பேஞ்ச மழை*
*தூத்தலோ எண்ணிருந்தேன்*
*வாசல்லே பேஞ்ச மழை*
*வாராது எண்ணிருந்தேன்*
*வாசல்ல பேஞ்ச மழை*
*வரிக்கல்லை பேத்ததிப்போ*
*கண்டாருக்கு நல்ல மரம்*
*கணுக்கணுவா இத்த மரம்*
*உள்வீடு அற்ற மரம்*
*உள்ளுக்குள்ள வெந்தமரம்.*

*.......*

துடிதுடிக்கும் உதடுகளில் வார்த்தைகள் குழறின. நெஞ்சு பட்டென்று வெடித்துவிடும் போல் இருந்தது. பாட முடியவில்லை.

ஞாயிறு காலையில் ஜக்கனன் வந்தான். அவன் சாயந்திரம் பன்றிகளைப் பட்டியில் அடைத்து விட்டு போலீஸ் ஸ்டேசன் வந்ததாகவும் பார்க்க போலீஸ் மறுத்ததாகவும் கூறி அழுதான். அவனோடு பேச முடியவில்லை. அழுகையின் வெறி பீறிட்டது. போலீஸ் 'அழுதால் லத்தி' காட்டி ஆட்டினான். சாயந்திரம் பன்றிகளை அடைத்துவிட்டு வருவதாக சொல்லிவிட்டுச் சென்றான். ரெண்டு மணிக்கு ''இனிமே நரம்ப அத்திடுவேன். போ'' மிரட்டி விட்டார்கள்.

முதலில் பாங்கிணத்தில் தவ்வ நினைப்புத் தோன்றியது. மகனை



படிப்பகம்

www.padippakam.com

ஏறெடுத்து பார்க்கவே வெட்கமாக இருந்தது. போலீஸ் ஸ்டேசன் கடக்கவும் பெத்தனன் ஊத்தாம் பாறை போகும் வழியாக ஓட்டம் பிடித்தான். அவ்னை விரட்டிப் பிடிக்க மனசில்லை. அவனுக்குள் எவ்வளவு வேதனையோ! கடவுளே ஸ்டேசனில் நடந்தது யாருக்கும் தெரியக் கூடாது. வேண்டலின் தகிப்பு. மனமோ வண்டுருளும் மாம்பழம். ஊருக்குள் நுழைந்ததும் "ஸ்டாட்டரை பிட்டரே திருடி புதைத்து வைத்திருந்ததாக" பேச்சு புசம்பியது. கேட்க கேட்க நெஞ்சு அதிர்ந்தது.

ஆவுளுகவுண்டன் ஓடையில் அரளிவிதை பொறுக்கியதை த.ன.கு.ன.செவனாண்டி எப்படியோ பார்த்திருக்கிறார். அது பின்னாளில் பன்னிவிட்டை பொறுக்கி போகும் போது அவரே சொன்னார். வண்டிச் சக்கரத்தில் கிடத்தி யார் யாரோ வேகமாக சுற்றினார்கள். கிலுகிலுப்பில் வாந்தி வந்து கொண்டே இருந்தது.

காலையில் தொழுவைத் திறந்ததும் மந்தைக் குளத்திற்கு ங்ங்கர்ர்ரிட்டு ஓடின. வெளிக்கி வந்து கொண்டிருக்கும் போதே முட்டி தூக்கிவிடும் பன்றிகள். அகப்பையையும் கூடையையும் தூக்கிக் கொண்டு திண்ணை வந்தபோது ஜக்கனனின் கவனம் ஒத்தக்கால் சவுரி தொடுப்பதில் குவிந்திருந்தது. கேரளாவில் ரெட்டக்கால் சவுரியைவிட ஒத்தக்காலுக்குத்தான் மவுசு.

மாடு, ஆடு மாதிரி பட்டியிலேயே விட்டைபோட்டால் என்ன என்று தோன்றியது. பின்னாலே அலைய வேண்டியதில்லை. அலைச்சல் மிச்சம். பட்டியில் விட்டை போடாத பன்றிகள் தெரு நெடுக போட்டுச் செல்லும் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான சுழற்சி.

ஒல்லிவால் வீசி ஓடும் மூனாம் ஈத்து கோணகாது பன்றிக்கு இரண்டு காம்பு சோடை. ஜலதாரி கருஞ்சேறு உடல் முழுக்க. இந்த வம்சமே ஈத்துக்கு ஒரு காம்பு சோடையாகி வருகிறது. இறுதியில் மடியற்ற காம்புகள். போன ஈத்தில் யானமூக்கு குட்டி ஈண்டது. ஊரே அதிசயத்து பார்த்தது. பிறந்த கொஞ்ச நேரத்தில் மூச்சில்லை. கருக்கலில் ரோட்டோரங்களில் வெளிக்கிருக்கும் ஆட்கள் எழுந்து முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டு நின்றார்கள். ஜவுக்குலு இறுக்காக ஓடிப்போய் கவ்வி அதக்கியது. அதன் வாய் ஓரங்களில் ப்பீ வெளியேறியது. அகப்பையை விட்டை அருகில் வைத்து இடதுகால் முன்பாகத்தில் சுண்டி கூடைக்குள் போட்டு நகர்ந்தாள்.

மகன் பேயாகிவிட்டானா? தெய்வமாகவில்லையா? அந்த போலீஸ்காரர்கள் கழுத்தை இறுக்குகிறான். மூச்சுத்திணறி வாயில் ரத்தம் நுரைக்கிறது. அவன் கண்கள் நெட்டுகுத்தலாக நிற்கின்றன. கற்பனை வேறிடத்திற்கு தாவியது. வரவர இந்த கிராமத்திலும்



படிப்பகம்

www.padippakam.com

வீட்டுக்குள்ளே வெளிக்கி இருக்கும் கழிவறை கட்டிக் கொள்வது எரிச்சலூட்டியது. முன்னமெல்லாம் வழிநெடுக நெருக்கமாக ப்பீ இருக்கும். பன்றிகள் நின்று நிதானித்து சண்டைபோடாமல் தின்று போகும். இப்போது தூரத்து இடைவெளிகளில்தான் மலம் கிடக்கிறது. கண்டதும் போட்டி போட்டுக் கொண்டு ஓடிப் போய் ஒன்றை ஒன்று முட்டி ங்ங்ச்ச்சிடுகின்றன. பன்றிகள் தின்னாமல் வீணே ப்பீ வீட்டுக் கழிவறையிலேயே சேர்ந்து அழிவது வருத்தமளிக்கிறது. ரோட்டில் வெளிக்கிருந்தால் என்ன? பன்றிக்கு உணவாகுமே! இதமான காலை வெயில் எங்கும் வியாபித்திருந்தது.

புளியமரத்துள் மகன் குடியிருப்பானா? அடித்தண்டில் ரத்தம் வந்ததாக சொன்னார்களே. எருக்கலஞ்செடி ஓரம் இருக்கும் விட்டையை காலில் அணைக்காமல் அகப்பையிலேயே வாரி விட்டாள் பெத்தனன் புளியமரத்துள் தெய்வமாக புதைந்திருக்கிறான். அந்த விட்டை அகப்பைக்குள் விழாமல் பிரண்டு பிரண்டு விழுந்தது. இடதுகால் முன் பாதத்தில் அணைத்து வாரி கூடையில் போட்டாள். ஏமாற்றமாகிவிட்டது. நெஞ்சுக்குள் திக். 'ஒதயபாரு வெரட்டிக்கிட்டு' இதுல இருக்கும் கொழுப்பு அடையடையாக! உருக்கி வச்ச டப்பா ஒன்று இருக்கிறது. மூலத்துக்கு மருந்து மொன பண்ணிக் கொண்டு திரிந்த நெத்திச் சுட்டி கொட்டை எடுக்கவும் ரெண்டு நாளாக ஒழுக்கமாக போகுது. சிவந்தவடு தெரிந்தது. அடுத்த விட்டையை கால் அணைக்காமல் சரட்டென்று அழுத்தி வாரி தூக்கினாள். அகப்பைக்குள் விழுந்தது. பளிச்சிட்டு மலர்ந்தது முகம்.

போனமுறை சேர்த்த எரு நாசமாகிவிட்டது. மூடை இருபத்தைந்து ரூபாய். பத்துமூடை விட்டை இருக்கும். சாக்குப் போட்டு மூடியிருந்தாலும் வந்த மழை வலுத்துவிட்டது. ஈரம்பட்டாலே புழு தோன்றிவிடும். மழை நீர் இறங்கிய பிற்பாடு என்ன செய்ய முடியும்? 'போனதெல்லாம் போகட்டும்' விட்டையை வாரி கூடையில் போட்டாள். ஏன் இந்த மழைக்கும் விட்டைக்கும் சேராட்டமில்லை? விட்டைக்கு மட்டுமா? கொன்ற பன்றியை தீயில் உடனே வாட்டவில்லையென்றாலும் புழு வைத்து விடும். யய்யா இதற்கெல்லாம் ஒரு கிருஷ்ணதேவுடு கதை சொல்வார். யார் இப்போ அதை நம்புகிறார். மூச்சுப் போனால்? பன்றி புழு. உசுரு போகாமலே என் உடலில் எத்தனை புழுக்கள். நெளியும் போலீஸ் புழுக்கள்.

பெத்தனன் இருந்திருந்தால் பெரிய மீசை வந்திருக்கும். கனவுகளில் வந்த பெத்தனனை தேடினாள். ஞாபகத்துக்கு வரவில்லை. உடலை மழைப்பாயில்



படிப்பகம்

www.padippakam.com

சுருட்டிக் கொண்டு போனபின் காற்றின் திசையில் "நம்மள இந்த நெலைக்கி ஆளாக்குனவன் அத்த நாசமா போகணும்" மண்ணை வாரி இறைத்ததும் நிழலாடியது. மண்படலம் காற்றில் நீந்தி பூமியில் படிந்து கொண்டே போய் முடிந்தது.

ரத்தம் கசியும் புளிய மரத்தைப் பார்க்கணும்போல் இருந்தது. பன்றிகள் ஆண்கள் மந்தைக்குள் ஓடின. மூக்கில் விட்டை குவியலில் கூடையை கொட்டிவிட்டு சாக்கை மறுபடி மூடினாள். கமகமக்கும் விட்டைக்குவியல். போலீஸ் ஸ்டேசனை தீயிட்டு கொளுத்த தோன்றியது அச்சமயம். மனக் குரல் 'பிடிபட்டு விடுவேன்' என் றொலித்ததும் கைகால்கள் வெள வெளத்துப் போயின.

வாரிக்கரையில் நின்ற பரவு காவல்கார பொம்மையனின், "ஏய் மூக்கம்மா" குரல் கேட்டு ரோட்டு கட்டுகாப்பில் நின்றாள்.

"பதினஞ்சு ரூவா கேட்டேனே என்ன"

"இதென்ன சாமி ஏழை பாளைகிட்ட போயி..."

"அப்ப மந்த கொளத்துக்கு பன்னிய கொண்டு வராதே"

"மந்தக் கொளத்தில பரம்பரப் பரம்பரையா விட்டுருக்கோம் சாமீ. ப்பீத்திங்கிற பன்னிக்கி புதுசா காசு கேட்டா எப்படி சாமி. ப்பீக்கும்காசா?"

"மப்பா பேசாத மூக்கம்மா. மந்தக் கொளத்த் தாண்டி ஆண்டிக் கவுண்டர் தோட்டத்தில மேயல"

"இல்லசாமி"

"என்ன நொல்ல சாமி. தண்ணி யில்லாம எல்லாந் தரிசா போயி டுச்சு. அந்த கையகல வெள்ளாம ஓம்பன்னிக்கி? அப்படித்தான? ஒன்னயெல்லாம் காவ குடிசல்ல கொண்டு போயி வச்சாதான் சரிபட்டு வருவ"

பேசாமல் முந்தானையில் முடிந்து வைத்திருந்த மடங்கிய பத்து ரூபாய் நோட்டை கட்டுக் காப்பில் நின்றவாக்கில் காவகார னுக்கு கொடுத்துவிட்டு நகர்ந்தாள்.

ஏறுபொழுதில் மகள் வரவும் அகப்பையையும் கூடையையும் கொடுத்துவிட்டு வீட்டுக்குக் கிளம் பினாள். ஒரு எட்டு புளிய மரத் தைப் பார்த்துவிட்டு திரும்பலாம் என்று தோன்றியது.

ஆண்டிக் கவுண்டர் வரப்பைத் தாண்டி வண்டிப் பாதையைப் பிடித்தால் சாட்கிட் பாதை. நடக்க நடக்க உஷ்ணம் ஏறிக் கொண் டிருந்தது. அங்கொன்றும் இங் கொன்றுமாக தெரிந்த வெள்ளா மைத் தோட்டங்கள் மறைய விரிந்த வானாம்பாரி நிலம். மிக தூரத்தில் மங்களாக புளியமரம்.

மதிய வெய்யிலில் பொய்க் குதிரை பூமிக்குமேல் நெளிந்தது. மரத்தடியில் ரம்பம் உராய்ந்த இடத்தில் மேற்புறபட்டை



படிப்பகம்

www.padippakam.com

உதிர்ந்து இருப்பது தவிர ஒரு அடையாளமும் இல்லை. ரத்தக் கசிவு ஏதும் இல்லை. மரத்தடியில் குளுமை கட்டி அணைக்க முடியாத அடிமரத்தில் நெஞ்சை சாய்த்ததும் கண்கள் கலங்கின. கிளையில் பெத்தனன் தொங்குவது போல் ஒரு கணம். பின் மரம்.

ஒரு ஈ காக்கைகூட இல்லாத தகிக்கும் வெயில் பரப்பு. உதிர்ந்த புளியம் பிஞ்சுகளையும் பூக்களையும் பொறுக்கி மடியில் முடிந்து விலகி நின்று புளியமரத்தைப் பார்த்தாள். பூத்துக் குலுங்கியது மரம். ''மகனே'' கையெடுத்து கும்பிட்டு வீடு திரும்பினாள்.

இரவு நெடுநேரம் தூக்கம் வராது புரண்டு கொண்டிருந்தாள். கண்ணயர செவிப்பறையில் ரம்பத்தின் அறுவை ஓசை கேட்டது.

கருப்புத்துணி போர்த்திய இரு உருவங்கள் அடிமரத்தில் ரம்பம் போட ரத்தம் பீறிட்டது. முதலில் ரத்தம் போல் தெரிந்த உடைப்பு மஞ்சள் நீராக தவ்வியது. முதுகு பின் வாக்கில் பிணைத்து கட்டிய கையும், வாயில் திணித்த துணிப் பொட்டலமுமாக பெத்தனன் பூமியில் கிடந்தான். இடுப்பை யாரோ அறுப்பது மாதிரி தெரிந்தது. அதுவும் இல்லை. மரத்தின் உள் நீண்ட உடல் புதைந்திருப்பது மாதிரியும் தெரிந்தது. தண்டறுத்து முடிய மண்ணில் சாயாது பெருங்கொண்ட மரம் மேலெழும்பி பயணப்பட்டது. தென்திசையோடிய கிளை பிரிந்து அந்தரத்தில் நின்றது. பூமியில் புதையுண்ட தண்டின் நடுப்பகுதியில் ரத்தக் குழம்பு கொதித்தது. மேலே மேலே பறக்கும். மரம் புள்ளியாகி மறைந்தது.

அந்தரத்தில் துண்டுபட்ட பெருங்கிளை ஜொலித்தது. உடல் குறுகி வர, கைகள் இறகு முறைக்க, மெலியும் விரல்களில் நகம் நீள முழிதிரட்டிய பெத்தனன் கூகையாகி அமர்ந்தான்.

''யம்மேய் நெஞ்சில் மாயக்கல் கருவுற்று நாளாச்சு. அம்மாவாசை இரவு அந்தரத்திலிருந்து எச்சமிட்டுச் செல்வேன். செய்யும் தப்புகளையெல்லாம் உருமாற்றி விடும் கையில் வைத்திருந்தால். முழித்திருக்க முழியைப் பிடுங்கலாம். ருவிக்க முடியாது. கண்கட்டு வித்தை செய்யும் கல்''. பெரும் இறகுகளை அடித்து கிளையைக் கவ்வி பறந்தது. எந்த இரவு என்று கேட்கவும் இல்லை. கூகை சொல்லவும் இல்லை.

ஊர் முழுக்க காலையில் பரபரப்பாக இருந்தது. பெத்தனன் தொங்கிய மரம் சுவடுகூட இல்லாமல் மறைந்துவிட்டது என்றார்கள். வேர் திருடுதான் போயிருக்கும் என்றார்கள். மரம் இல்லை என்பது மட்டும் மூக்கம்மாவிற்கு தெளிவாகியது.

பின் அதுபற்றி நினைப்பில்லாமல் தன் வேலைகளில் மூழ்கினாள். ஆளற்ற மத்தியான வெயிலில் ரோட்டில் கிடந்த விட்டையை வெங்கடநாயக்கர் முறித்துப் பார்த்து ஒன்றுமில்லாது கண்டு தூர எறிந்ததை புதரில்



படிப்பகம்

www.padippakam.com

வெளிக்கிருந்த வாக்கில் பார்த்தாள். திடீரென்று ஒரு நாள் சாராய கேஸ் தேடிவந்த இரண்டு போலீஸ் இரண்டு சாக்கு விட்டைகளை கேட்காமலே அள்ளிக் கொண்டு போனது. வரவர மூக்கம்மாவிற்கு பயம் சூழ்ந்தது. பின்னொரு நாள் பன்றித்தொழுக்குள் திடுதிடுக்கும் ஓசை கேட்டு ஜக்கனனை எழுப்பிக் கொண்டு ஓடிய போது யாரோ அந்த இரவில் பட்டியைத் தாண்டி ஓடினான். அனாசாயலில் முத்துராசு போலத்தான்.

வீட்டுக்கு வராமல் ஈன்ற குட்டிகளோடு ஒளிந்து திரிந்தது எடவெள்ளை. நல்ல சன்னம். குட்டிகள் மளமளவென்று மனுவாகும். பகலில் பிடிக்கப் போனால் எடவெள்ள குட்டிகளோடு புதருக்குள் நுழைந்து கொள்கிறது. அதனால் குட்டியோடு படுத்திருக்கும் இரவில் கயிறு வீசி பிடிக்கப் போனார்கள். அது அம்மாவாசை நாளென்று ஞாபகம்கூட இல்லை. ஓடை ஏறி தோப்புக்குள் நுழைந்ததும் மரத்தின் பின் யாரோ பதுங்கி இருப்பதுபோல் தெரிந்தது. ஒரு உருவம் மட்டுமல்ல வேறு வேறு மரத்தில் வேறு வேறு உருவங்கள். எதையோ எதிர்பார்த்து பதுங்கி இருக்கும் நிழல்கள். திரும்பி விட்டார்கள்.

நீண்டு பாய்ந்த ஓடையின் ஈரம் குறுகி வர விரியும் வறட்சிகள். கூரைகள் மீது விடிகாலை தன் பங்கு அன்னத்திற்கு அமர்ந்த காகங்கள் கால் நகத்தால் அலகு நோண்டி ஏறுவெயிலுக்குப் பின் ஏமாந்து ஏமாந்து கரைந்து பறந்தன. நிற மாறிய மனிதர்கள் கூச்சமற்று நிமிர்ந்தார்கள். எப்படி சாத்தியமாயிற்று?' மூக்கம்மா மூளைக்குள் தத்தளிப்புகள். தூய்மை என்றது பழந்தூசோ? கருணை இனி ஒவ்வாத ஈரமோ? காலத்தை எதிர் கொள்ள நாதியற்றவள். எனக்கு வைரம் பத்தாதோ? எந்த நிலை சரி? அவளுக்கு எதுவும் தெளிவாகவில்லை.

ஊரை காலி செய்து கிளம்ப எண்ணம் தோன்றவில்லைதான். ஒரு நாள் காக்கிசட்டை நடு ஜாமத்தில் கதவு தட்டி எழுப்பியது. கமுக்கமான குரலில் "மாயக்கல்ல எங்க ஒளிச்சு வச்சிருக்க?" கேட்டது. "எங்களுக்குத் தெரியாது சாமி" உண்மையில் மூக்கம்மா மறந்து விட்டாள் கனவில் வந்ததை. தசையெங்கும் உதறல். கண்ட கனா ஜாலவைதத்தையும் தட்டிப் பறிக்க நாட்டாண்மைகளுக்கும் வந்ததோ கனவு? "கொடுக்கலையன்னா ஒம்புருஷனையும் மகளையும் விசாரணைக்கு கொண்டு போவோம்" மிரட்டி விட்டு போனார்கள். தொடை சந்து அதிர்ந்தது. "பெத்தனா எங்கள ஏண்டா சோதிக்கிற" - உதடுகள் நடுங்கின. தூரத்தில் மணல்பரப்புகள் தெரிந்தன. இளைத்து நின்ற பன்றிகளை அமட்டி ஓட்டிக் கொண்டு போனார்கள் புதிய மக்கள் தென்படுவார்கள் என்று. நடை தளர்ந்து கொண்டே வந்தது. ■



படிப்பகம்

www.padippakam.com

# வெகுஜன தமிழ்ப் திரைப்படங்களின் கட்டமைப்பும், கதையாடலும்- சில விவாதக் குறிப்புகள்

சி.சொக்கலிங்கம்

இருபதாம் நூற்றாண்டின் ஆகப்பெரிய கலைச்சாதனம், கலையை ஜனநாயகப்படுத்திய பிரம்மாண்டமான ஊடகம், முதலாளித்துவ சமுதாயத்தில் உருவான கூட்டுக் கலைப்படைப்பு திரைப்படம். இதன் தாக்கம் தமிழகத்தில் வலுவானது. ஆனால் இந்த ஊடகம் பற்றிய சரியான புரிதல் நம்மிடம் வளர்க்கப்படாதது இன்னும் தொடரும் குறை. பெரும்பாலான திரைப்படக் கலைஞர்களும், பார்வையாளர்களும் திரைப்பட மொழி குறித்த தெளிவான கண்ணோட்டமற்றவர்களாகவே இருக்கிறார்கள். தமிழ்மேடை நாடகக் காட்சி அமைப்பின், நாடக மொழியின் தொடர்ச்சியாகவே இன்றைய தமிழ்த் திரைப்படங்களில் பெரும் பாலானவை செயல்படுகின்றன. இத்தகைய திரைப்படங்களை வானொலி நாடகங்களைப்போல கேட்டே பார்க்க முடியும். திரைப்பட மொழி பற்றிய புரிதல் உள்ள இயக்குநர்களில் பெரும்பாலோர் அதனை பயன்படுத்தும் விதம் விவாதத்திற்குரியது. ஆனால் அதற்கான முயற்சி துளிகூட நம்மிடம் இல்லை. திரைப்பட மொழி பற்றிய புரிதலே திரைப் பட உள்ளடக்கம், அதன் உளவியல் தாக்கம், பண்பாட்டு அரசியல் விளைவுகள் ஆகியவற்றிற்கான விளக்கத்தைத் தரும் அடிப்படை.

இவ்விவாத உண்மைக்குள் மேட்டிமைத்தனம் (Elitism) என்ற பலகீனமும் ஒளிந்திருக்கிறது. வெகுஜன சிந்தனை, வெகுஜனப் பார்வை ஆகியன கீழானது, தரமற்றது என்பதன் தொடர்ச்சியாக வெகுஜன இதழ்கள், வெகுஜன திரைப்படம் போன்றவை பற்றி எதிர்மறைக் கருத்து கட்டமைக்கப்பட்டுள்ளது. மக்களோடு நெருங்கிய உறவுகொண்ட, உணர்வு கொள்ளாத அமைப்புகள், தனிநபர்கள் எல்லோருமே மக்களைக் கடைத்தேற்றப் பிறந்தவர்கள் தாம்தான் என்ற சிந்தனையில் மிதக்கிறார்கள். மக்கள் மக்களுக்காக, தமக்காக சிந்திக்க இயலாதவர்கள் என்ற எதிர்மறைப் பார்வையின் விளைவே இது.

இந்தியாவில் மொத்தமிருக்கும் 12000 திரை அரங்குகளில் தமிழ்நாட்டில் மட்டும் 2000 த்திற்கும் அதிகமானவை உள்ளன. சாதாரணமானவர்களின் குறைந்த செலவுள்ள ஒரே பொழுதுபோக்கு திரைப்படங்களே. ஆண்களின்



படிப்பகம்

www.padippakam.com



துணை இல்லாமல் பெண்கள் செல்ல உரிமையுள்ள வெளி இடங்கள் இரண்டு; ஒன்று கோவில்; இரண்டு திரைப்படம். திரைப்படம் பார்த்தல் என்பது ஒரு தொடர்நிகழ்வு. பார்க்குமுன், பார்க்கப்போகும் திரைப்படம் பற்றிப் பேசுவது, தம்மிடம் உள்ள ஆடைகளிலேயே நல்ல ஆடைகளை அணிந்து அலங்காரங்கள் செய்து திரைப்படம் பார்க்கச் செல்வது, பார்த்து வந்த பின், நடிகர், நடிகைகளின் ஆடைகள், ஆபரணங்கள், உடல் அசைவுகள்,பாடல்கள், வசனங்கள், சாகசங்கள் பற்றி விவாதிப்பது என திரைப்படம் பார்த்தல் தொடரும். புதிதாக திருமணமானவர்கள் ஜோடியாக திரைப்படம் பார்க்கச் செல்வது திருமணச் சடங்குகளுள் ஒன்றாகிவிட்டது. சுபமான முடிவுகள் உள்ள படங்களையே இதற்காகத் தேர்ந்தெடுப்பது என்பது இன்னும் தொடரும் பழக்கம். திரைப்படங்கள், நடிகர், நடிகையர் பெயர்களால் சாரி, சட்டை, வளையல் என்று பல்வேறு பொருட்கள் விற்பனையாவதும், தமக்குப் பிடித்த நடிக, நடிகையர்களின் படங்களை ஏதோ ஒரு வடிவில் தன் உடம்பில் அணிந்து மகிழ்வதும் இன்னும் தொடர்கிற செயல்கள்.

கேள்வி அறிவின் மூலமே பிரச்சினையைப் புரிந்து கொள்ளும் சூழலில் பெரும்பாலான தமிழ் மக்கள் இருக்கிறார்கள். இந்நிலையில் மேடைப்பேச்சு, நிகழ்த்து கலைகள், திரைப்படம் ஆகியன மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தன.

இத்தகைய மிக வலுவான தாக்கம் நிறைந்த வெகுஜன திரைப்படத்தை



படிப்பகம்

www.padippakam.com

மேட்டிமைப் பார்வையில் புறங்கையால் ஒதுக்குவது தமிழ்ச் சமூகத்தின் இயக்கத்தைப் புரிந்து கொள்ளத் தடையாக இருக்கும். அதுபோலவே திரைப்படம் ஒரு கலை. அதே நேரத்தில் கணிசமான லாபம் தரும் வியாபாரம். இந்த வியாபாரம் பார்வையாளர்களை எப்படிப்பட்டவர்களாக மாற்றுகிறது என்பதும் புரிந்து கொள்ள வேண்டிய ஒன்று.

இத்தகைய அடிப்படையில் தமிழ்ச்சூழலில் வெகுஜன திரைப்படம் எத்தகைய கட்டமைப்பைக் கொண்டிருக்கிறது, எத்தகைய கதையாடல் களை நிகழ்த்துகின்றன என்று பரிசீலிப்பது அவசியம்.

நாட்டார் கலைகள் என்று வழங்கப்படுவன எல்லாமே மக்கள் வாழ்வின் ஒரு கூறாகவே இருக்கும். அதற்குள் பொழுது போக்கு அம்சம் செயல் பட்டாலும், வாழ்வில் இருந்து அதனைப் பிரிக்க இயலாது. இத்தகைய நாட்டார் கலையின் பங்காளர்கள், திரைப்படப் பார்வையாளர்களாகச் செயல்படும் போது பங்காளர் மனோபாவமே பெரிதும் செயல்படும். திரையில் நடிகர் கிருஷ்ணனாக அல்லது ராமனாகத் தோன்றியவுடன் கற்பூரம் காட்டுவது, பூக்களைத் தூவுவது, மகாபாரதம், ராமாயணம் ஆகிய தொடர்களைத் தொலைக்காட்சியில் பார்க்க குளித்து, தூய ஆடை உடுத்தி உட்காருவது என்ற செயல்களை இதன் தொடர்ச்சியாகவே பார்க்க முடியும்.

திரைப்படங்கள் இரு மையங்கள் சார்ந்தது. ஒன்று தயாரிப்பு; இதனைக் கதை, திரைக்கதை, உரையாடல், இசை, தொழிற்நுட்பம், திரை அரங்கு, விநியோகம் இன்னும் இவை போன்றவை எல்லாம் இணைந்தது எனலாம். இன்னொரு மையம், பார்வையாளர்கள். இவர்களை ஆண்கள், பெண்கள், குழந்தைகள் நகர் சார்ந்தவர்கள், கிராமம் சார்ந்தவர்கள் இன்னும் இது போன்ற பல பிரிவுகள் என்று கொள்ளலாம்.

இந்த இரு பிரிவினரிடையேயும் பரஸ்பர உறவு உண்டு. அதனை இப்படி புரிந்து கொள்ள முடியும். வெகுஜன திரைப்படம் வெகுஜன உணர்வின் ஏதோ ஒருவிதமான பிரதிபலிப்பு; நுகர்விய வலையை விரித்து, பார்வையாளர்களை தன்னுணர்வற்ற நுகர்வோர்களாக மாற்றும் ஊடகம்.

இத்திரைப்பட ஊடகம் தகவல் தொடர்பு ஊடகமாகச் செயல்படுகிறது என்ற புள்ளியிலிருந்து தொடங்கினால் தகவலைப் பொதிந்த கலையாகவும், கலை தரும் தகவலாகவும், வெகுஜன திரைப்படம்



படிப்பகம்

www.padippakam.com

செயல்படுகிறது என்றும் புரிய முடியும்.

வாழ்க்கைச் சூழல் மாற்றத்தில் கிராமங்களிலும், நகரங்களிலும் கதை சொல்லிகள் குறைகிறார்கள். இந்த இடைவெளியை வெகுஜனத் திரைப்படங்களே நிரப்புகின்றன.

பண்டைய கதைசொல்லிகளின் சொற்கள் மட்டுமல்லாமல் உடல் அசைவுகளும், கேட்போரின் பங்கேற்பும் கதை சொல்லலோடு இணைந்ததே. அந்தந்த சூழலுக்கேற்ப கதைசொல்லியின் சொற்கள் புதுப்பொருளோடு கதைசொல்லியிடம் வெளிப்படும்.

திரைப்படம் நிகழ்த்தும் கதைசொல்லல் வேறுவிதமானது. திரைப்பட நிகழ்வுகளோடு ஒன்றி பார்வையாளர் தமக்குள்ளேயே உரையாடல் நிகழ்த்துகிறார். தனிமையை, தான் மட்டும் திரைக்கதாபாத்திரங்களோடு உரையாடுவதான சூழலை இருள் ஏற்படுத்திக் கொடுக்கிறது. பிம்பங்கள், பார்வையாளன் என்ற நிலைகள் மறக்கடிக்கப்பட்டு சகமனித உறவு பாவம் உருவாகி உரையாடல் நிகழ்கிறது. வசனங்கள், உடல் அசைவுகள் ஆகியவற்றில் தன் உணர்வைப் பாய்ச்சி உரையாடல் நிகழ்கிறது. திரையில் எம்.ஜி.ஆர். சண்டை போடுகிறார். கையில் கத்திஇல்லை. வில்லன் வீரப்பாவிடம் கத்தி இருக்கிறது. பார்வையாளர் தன் இடுப்பிலிருந்த கத்தியை திரையை நோக்கி எம்.ஜி.ஆரிடம் வீசுகிறார். தமக்குள் நடைபெற்ற உரையாடலின் தொடர்வினை இது. திரை பிம்பங்கள் சமூக வீரர்களாவதன் உளவியல்தளம் இதுதான்.

பிம்பங்களோடு நிகழ்த்தப்படும் உரையாடல் வெளியே நண்பர்களோடு, குடும்பத்தாரோடு என்று விரிகிறது. இத்தகைய உரையாடல்கள் சமூக மனதின் கட்டுமானத்தை கணிசமான அளவில் தீர்மானிக்கிறது. சமூகப் பார்வையை அரசியலைக் கட்டமைக்கிறது.

ஏற்கனவே, நன்மை X தீமை, நல்லவன் X கெட்டவன், சமூக நலன் X சுயநலன் போன்ற எதிர்நிலைகளால் கட்டமைக்கப்பட்ட பல சொல்லாடல்கள் நிறைந்துள்ள தமிழனிடம் இதே எதிர்நிலைகள் புதிய ஊடகத்தால் மீண்டும் கட்டமைக்கப்படுகிறது. இதன் ஜனநாயக சாரத்தை பார்வையாளர் தம் சமூகப் பார்வை வழி உறிஞ்சி தம்மை இணைத்துக்கொள்ள முயற்சிக்கிறார்; அதற்கேற்ப எதிர்வினை புரிகிறார். இத்தளத்தின் பரந்த தன்மையை அக்குவேறு ஆணி வேறாகப் புரிந்து கொண்ட திரைப்பட வியாபாரிகள், நுகர்வு மனோபாவத்தை, ஆதிக்கக் கருத்தியல் கண்ணிகளுக்குள் கட்டுண்டு கிடக்கச் செய்கிற



படிப்பகம்

www.padippakam.com

மனோபாவத்தை நிலை நிறுத்த முயற்சிக்கிறார்கள்.

வாழ்க்கையில் ஒரு தனிநபர் பன்முகக் கூறுகளோடு இருக்கிறார். ஒரு சாதியைச் சார்ந்த தனிநபர், தன் சாதியைச் சார்ந்தவர்களுக்கு நல்லவன், தன் எதிர்சாதியின் பார்வையில் மோசமானவன், குடும்பத்திற்கு திறமையோடு சம்பாதித்துக் கொடுப்பதால் நல்லவன், அலுவலகத்தில் லஞ்சம் வாங்குவதால் பொதுமக்கள் பார்வையில் கெட்டவன்...இப்படி இப்பன்முகக்கூறு தொடரும். தமிழ்த் திரைப்படத்தில் தனிநபர், குறிப்பாக மையக் காதாபாத்திரம் ஒற்றைக் கூறோடு மட்டுமே சித்தரிக்கப்படும். இந்த ஒற்றைப் பண்பின் நீட்சியே நல்லவன் என்ற காதாநாயகன், கொடியவன் என்ற வில்லன் போன்ற படிமங்கள்.

எம்.ஜி.ஆர்.திரையில் நல்லவர், நன்மையை மட்டுமே சிந்திக்கும், செயல்படுத்தும் கதாபாத்திரம்.எல்லா திரைப்படங்களிலும் இதே தன்மை தொடர்கிறது. இப்போது திரைக் கதாபாத்திர எம்.ஜி.ஆரின் பண்புக் கூறுகளே எம்.ஜி.ஆர். என்ற தனி நபரின் குணநலன்களாக மாறி எம்.ஜி.ஆர். நல்லவர் என்ற ஒற்றைப் பண்புள்ளவராக மாறிவிடுகிறார்.. இனி தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் இந்த படிமத்தை உடைக்க மாட்டார்கள். உரையாடல் ஆசிரியர்கள், பாடலாசியர்கள் இப்படிமத்திற்கு வலுச்சேர்ப்பார்கள். கேமிராவின் கோணங்கள் வலுச்சேர்க்கும் விதத்தில் மட்டுமே பார்க்கும். செயல்படும். ரத்தமும் சதையுமான எம்.ஜி.ஆர். மறக்கடிக்கப்படுகிறார். பிம்ப எம்.ஜி.ஆர். அவதார புருஷராகிறார். ஒளிவட்டம் பின்னப்படுகிறது.

வெகுஜன திரைப்படங்களை அழகியல் பார்வை வழி பார்த்து, மலையாள, வங்காளப் படங்களை ஒப்பிட்டு ஒதுக்கிவிடுவது என்பதே தீவிர கலை இலக்கியகாரர்களின் பொது நிலையாக இருக்கிறது. பெரும் பத்திரிகைகள் திரைப்பட வியாபாரிகளின் துணைக்கருவிகளாகவே செயல்படுகின்றன. சிறு பத்திரிகைகள் பெரும்பாலும் வெகுஜன திரைப்படங்களைக் கண்டு கொள்வதில்லை.

இந்நிலை காரணமாக வெகுஜன திரைப்படங்கள் பற்றிய காரியமான விவாதங்கள் நடைபெறுவதே இல்லை. இந்நிலையை மாற்ற வேண்டியதும் வெகுஜன திரைப்படம் என்பதை ஒரு திரைப்பட வகைமையாக ஒப்புக்கொண்டு விவாதத்தைத் தொடங்குவதும் சமூக அவசியம்.



படிப்பகம்

www.padippakam.com

# குஜராத்தி மற்றும் அஸ்ஸாமிக் கவிதை

## தமிழில்: சித்ரா வெங்கி

சிலசமயம் என் அம்மா வெடித்துச் சிரிப்பாள்
அவள் முகத்தில் ஓர் ஒளிபடரும்.

அந்த ஒளியைப்போல
தூரதூரத்தில் தெரிகிறது அந்த செந்நிறவீடு.
அதைச்சுற்றி தேய்ந்த நினைவுகளின் ஒளிவட்டம்

தெறிந்த பச்சையில் வியக்கவைக்கும் சாளரங்களுடன்
சிவந்த சுவர்களும் செந்தூரக்கூரைகளும் கொண்டது என் வீடு
அடர்ந்த நீலப்பின்னணியில்
ஒரு வெள்ளைத்தீசலில் புள்ளியாகிப்போகும் பறவைகள்

இந்தச்சித்திரத்தை இறுக அணைத்துக்கொண்டு
இடைவிடாது அசையாமலே
இன்னமும் நிற்கிறாள் என் அம்மா.

- ரமணிக் அக்ராவத்(குஜராத்)

O


எனக்கு நிறைய சாமியார்களைத் தெரியும்
ஆனால் நான் யாரையும் பின்பற்றுபவனல்ல

நிறையக் கோட்டைகளுக்குப் போயிருக்கிறேன்
ஆனால் எதையும் நான் பரிந்துரைக்கவில்லை

ஒரு அடர்ந்த இர்வில் வழிதவறிய பின்
பாதையைக் காட்டுமே ஒரு ஒளி



படிப்பகம்



நான் அதைப்பின்பற்றுகிறேன்

ஒரு நட்சத்திரத்திலிருந்து இன்னொரு நட்சத்திரத்திற்கு
எல்லையற்று நீண்டு கொண்டே செல்கிறது.

ஒளி பிடிவாதமானதல்ல
கணத்திற்கு கணம்
கால்வைத்து போகும் வரும்

ஒளி தண்ணீரைப்போன்றது

நானொன்றும் குறிப்பிடத்தக்கவனல்ல
ஒளியின் கடலில்
ஒரு சாதாரண மாலுமியின் மகன்

புயல்காற்றிலும் கூட
தினம் தோறும் ஒரு புதிய கண்டுபிடிப்பிற்கான
எதிர்பார்ப்போடு
எனது படகின் கயிற்றைத் தளர்த்திக் காத்திருக்கிறேன்.

- சமீர்தண்டி (அஸ்ஸாம்)

www.padippakam.com

सत्यमेव जयते

புதுச்சே

# நலிந்தோர் நல்வாழ்விற்கு சமூ

மனவளர்ச்சிக் குன்றியவர்கள், ஆதரவற்ற முதியோர்கள் / தொழுநோயாளிகள்,
மற்றும் சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினர் ஆகியோரின் உடல், உள்ளம் மற்
குடும்பத்தினரின் பொருளாதார வளர்ச்சிக்கென புதுவை அரசு சமூக நலத்
1996-97-ம் நிதியாண்டில் சுமார் 8350 ஊனமுற்றோர்கள் பல்வேறு திட்டங்களி

## ஊனமுற்றோர் நலம்

- புதுவை யூனியன் ஆட்சிப் பரப்பில் வாழும் உடல் ஊனமுற்றோர் பற்றிய விரிவான கணக்கெடுப்புப்பணி
- மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு வில்லியனூரில் புதியதோர் இல்லம்
- உடல் ஊனமுற்ற சிறந்த ஊழியர் மாநில விருது (அ) ரூ. 2500/-ல் இருந்து ரூ. 3000/- ஆக உயர்வு (ஆ) ஊனமுற்ற ஊழியர்களை பணியில் அமர்த்தும் அரசு மற்றும் தனியார் நிறுவன விருது ரூ 2500/-ல் இருந்து ரூ. 10,000/ ஆக உயர்வு
- ஊனமுற்றோர் தொழிற்பயிற்சிக்கான மாதாந்திர உதவித் தொகை ரூ. 580/- ஆக உயர்வு; 64 நபர்கள் பயிற்சிக்கு ஏற்பாடு
- 500க்கும் அதிகமான பார்வையற்றோருக்குக் கைத்தடிகள், குளிர்கண்ணாடிகள் மற்றும் பிரெயிலி கைக்கடிகாரங்கள்
- உடல் ஊனமுற்றோர் திருமணம் ஊக்குவிப்பு திட்டத்தின்கீழ் 12 தம்பதிகளுக்கு ரூ. 5000/- ஊக்கத்தொகை
- உடல் ஊனமுற்றோர், பிணி அகன்ற தொழு நோயாளிகள் மற்றும் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட 6303 நபர்களுக்கு இலவச வேட்டி சேலைகள்

**[illegible]**

- 375 ஊனமுற்ற மாணவர்களுக்கு கல்வி உபகாரச்சம்பளம்
- மாதாந்திர உதவித் தொகை ரூ. 150 பெறுவோர் 572; புதிதாக 263 பயனாளிகள் தேர்வு
- இலவச பேருந்து பயணத்திற்கு புதிதாக 60 நபர்களுக்கு அடையாள அட்டை
- பார்வையற்ற, காதுகேளாத மற்றும் வாய்பேசாத குழந்தைகள் சிறப்புப்பள்ளியில் 200 மாணவர்கள் கல்வி
- ஊனமுற்றோர் சிறுதொழில் தொடங்கிட சுமார் 70 பேருக்கு மானியத்துடன் கூடிய வங்கி கடனுதவி
- 42 நபர்களுக்கு முடம் நீக்கும் கருவிகள் செயற்கை உறுப்புகள், காதொலி கருவிகள்
- புதுவை மற்றும் காரைக்காலில் உள்ள உடல் ஊனமுற்றோர்க்கான குழந்தைகள் இல்லத்தில் 185 மாணவர்களுக்கு கல்வி, உணவு, உடை மற்றும் தங்கும் வசதி
- மோட்டார் வாகனம் வைத்திருக்கும் ஊனமுற்றோருக்கு 50% எரிபொருள் ஈட்டுதவி





வெளியீடு : புதுச்சேரி

படிப்பகம்

www.padippakam.com

கு

# நலத்துறை

வர்கள், தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள்
வாழ்க்கை மேம்பாட்டுக்கும், அவர்தம்
அரும்பெரும் பணி ஆற்றிவருகின்றது.
கீழ் பயனடைந்துள்ளனர்.





## பிற்பட்டோர் நலம்

- ❖ பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்காக புதுச்சேரியிலும் காரைக்காலிலும் இலவச தங்கும் விடுதிகள் துவக்கிட பூர்வாங்கப்பணி
- ❖ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக தொழில் துவங்க புதுவை அட்டவணை இனத்தவர் மேம்பாட்டுக்கழகத்திற்கு ரூ. 10நீ0 லட்சம் நிதியுதவி

## சிறுபான்மையோர் நலம்

- ❖ சிறுபான்மைவகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டுக்கான திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கும் நோக்குடன் புதுவை மகளிர் மேம்பாட்டுக் கழகத்திற்கு ரூபாய் 5 லட்சம் நிதி ஒதுக்கீடு

## தன்னார்வல தொண்டு நிறுவனங்கள்

- ❖ புதுவை மாநிலத்தில் ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் பெண்களை வைத்துப் பராமரிக்கும் தன்னார்வல தொண்டு நிறுவனங்களில் 39 நிறுவனங்களுக்கு புதுவை அரசின் உரிமம்
- ❖ பாதுகாப்பற்ற குழந்தைகளுக்கான அரவணைப்பு மற்றும் பேணுதல் திட்டத்தின் கீழ் 21 நிறுவனங்களுக்கு ரூபாய் 25 லட்சம் நிதியுதவி; பயனடைந்தோர் 905 குழந்தைகள்
- ❖ தன்னார்வல தொண்டு நிறுவனங்களுக்கான நிதியுதவி ரூ. 3.25 லட்சம் பயனடைந்தோர் சுமார் 200 பேர்
- ❖ புதுச்சேரி சமூக நல ஆலோசனை வாரியத்தின் செலவினத்திற்கான அரசின் நிதியுதவி





வரசு சமூக நலத்துறை

படிப்பகம்

www.padippakam.com

# உன்னோடு கொஞ்சம்

## கௌரி ஷங்கர்

மனஸில் ஏதேனும் ஒரு காத்திருத்தலை சாத்தியப்படுத்துகிற எதுவும் உயர்வானது தான். அது ராத்திரியில் தூங்குகிறவனை எழுப்பிப் பார்க்க வைக்கிற மழை...வயல் வரப்போரச் செடியில் சிறகு முறிந்து கிடக்கும் வண்ணத்துப்பூச்சி சின்ன நெற்றியில் சந்தனமிட்டுக்கொண்டு பின்ன விடாத ஈரக் கூந்தலோடு பட்டுச் சரசரக்க கோவிலிலிருந்து வரும் பெண் இப்படி எதுவானாலும் சரி...எதன் மூலமும் வாழ்வை நேசிக்கிறது சாத்தியப்பட்டால் அதனைக் காதலித்துவிட வேண்டியதுதான். காதல் என்பது வெறும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஏற்படும் மன ஈடுபாட்டைக் குறிக்க மட்டும் இருக்கிற சொல்லல்ல. இயல்பாய் உள்ளுக்குள் பரிவை சுரக்க வைக்கும் எதனையும் அதோடு கொள்ளும் சம்பந்தத்தையும் வேறு என்ன பெயரிட்டு அழைப்பது? தினமும் இங்க் பில்லரால் நீரில் கரைத்த பிஸ்கட் கஞ்சியை அணிலுக்கு கொடுத்து சந்தோஷப்படுகிறான் ஒருவன். அணிலை அவன் காதலிக்கவில்லையா? நேசம் கொள்கிறவனுக்கு அது தொடர்பான எல்லையோ, லட்சியமோ இருக்க வேண்டும் என்பதில்லை. பூவென்பதற்காகவே பூவை நேசி; பெண் என்பதற்காகவே பெண்ணை சொந்தம் கொள். இன்னின்ன ராகம் என்று தெரிந்து கொண்டு கேட்டால் வித்வம் மட்டும் மிஞ்சும். எதுவும் தெரியாமல் கேட்டால் சந்தோஷம் மிஞ்சும். இதைத் தெரிந்தெடுப்பது அவனவன் பாடு. இன்னும் சொல்லப்போனால் உனக்குள் கதவினைத் திறந்து வைக்கிற எதுவும் ஒரு வழி ஆக உன்னைச் சிறைப்படுத்தாததன் மூலம் உலகத்தின் சத்தியம் அழகு அனைத்தையும் உன் பார்வைக்கும் நேசத்திற்கும் பாத்தியப்பட்டுத்துகிற ஒன்றாக இருக்கணும்.

அனைத்து ஜீவன்களையும் நேசிக்க முடியும் ஜீவநேசத்தை எவள் சாத்தியப்படுத்துகிறாளோ அவளே உனது ஜீவிதத்தை அர்த்தப் படுத்துகிற நேசிகை. அவளைக் கல்யாணமென்கிற சமூக ஏற்பாட்டின் கீழ் உனக்கருகில் கொண்டுவருவதும் அல்லது வேறொருவன் அவளை கல்யாணம் பண்ணிக் கொள்வதும் அல்லது அவள் கல்யாணமான பின்



படிப்பகம்

www.padippakam.com

உனக்கு அறிமுகமாயிருப்பதும் உனக்கு எவளோடாவது கல்யாணமாவதும் நீயும் அவளும் கண்டுகொண்ட நேசத்திற்கு சம்பந்தமில்லாத புற நிகழ்வுகள். உண்மையான நேசத்தில் இப்படிப்பட்ட உடமை வேட்கையோ சொந்தம் கொண்டாடும் உரிமைத் தாகமோ எதிர்பார்த்தல்களோ இருக்க வேண்டியதில்லை.

இரண்டு மூன்று வண்ண மரச் செப்புக்கள்...கொஞ்சம் வேப்பிலைகள்...தார் ரோட்டுப் பொடி மண்... சின்ன தகரடப்பாவில் அம்மாவுக்குத் தெரியாமல் கொண்டு வந்த தண்ணீர்...மூன்று சிறு கல்கள்...இவற்றை வைத்து துவங்க முடிகிற அப்பாம்மா விளையாட்டிற்குத் தேவையும் ஆதாரமும் ஸ்நேகிதம் மட்டும்தான். புற ரீதியான எந்த அந்தஸ்தும் பற்றிய கவலையின்றி தோழமையை மட்டும் நம்பித் தொடரும் அந்தச் சின்னஞ் சிறுசுகளின் விளையாட்டில் எதிர்பார்ப்பில்லை, அதனால் ஏமாற்றமும் இல்லை. ஒருவரையொருவர் வெல்ல வேண்டும் என்ற தன்மை இல்லை. அங்கு இருப்பதெல்லாம் அன்பு, ஸ்நேகிதம், தோழமை, நெருக்கம், பரிவு இவைகள்தான். களங்கமற்ற அந்த உறவு கொண்டுள்ள பிரியங்களைப் போக்கடிக்க வந்து சேரும் வயது இருவர் உடம்பிலும் மனஸிலும் கொண்டு வந்து சேர்க்கும் வர்ணங்கள் வக்ரங்கள் எவ்வளவோ... நம்பிக்கையில் கொள்ளும் ஸ்நேகிதங்கள்...அது வளர்த்து விடும் நேசங்கள்...நம்பிக்கை தவறானதும் ஸ்நேகிதம் பொய்த்துப்போய் நேசம் அழிந்து விடும் அவலங்கள்...எப்போதும் தொண்டையில் திரண்டு கண்ணில் நீராய் வழியும் சோகத்தோடு வானத்தில் மிகத் தூரத்தில் ஜோடி தவறிப் பறக்கும் பறவைகளில் ஒன்றைத் தானாக அடையாளம் கண்டு கொள்ளும் வேதனைகள்...

இந்த உள்ளடக்கத்தைக் கொண்டு நகரும் நாட்கள்... என் நாட்கள்...

இன்னும் எத்தனை நாள் உனக்கென நான் காத்திருக்க வேண்டும்? எத்தனை முறை உன்னைத் தேடி வந்து ஏமாற வேண்டும்? மதிய வெயிலில் உன் வீட்டு மாடியிலிருந்து டொப்பென்று விழும் எச்சில் இலை ஈரமற்றுக் காய்வதைப் பசியோடு எத்தனை நாள் பார்த்துக் கண் வலிக்க வேண்டும்? என்ன ஆயிற்று உனக்கு? சிறைப்படுத்தப்பட்டிருக்கிறாயா? இல்லை சிறகுகள் விரிக்க மனமில்லையா? துளிர்ப்பதும் வாடுவதுமாய் என் நெஞ்சை நம்பிக்கையற்றுத் தவிக்கடிக்கும் உன் வீட்டுச் செடியில் எனக்கென வெள்ளை ரோஜா என்று பூத்துக் கொடி காட்டும்? உன் முக வெளிச்சம் பரவ விடியும் காலையின் பூக்களை மாலையாகக் கோர்க்க



படிப்பகம்

www.padippakam.com

நாளென்று வாய்க்கும்? என்று உன்னில் முழுவதுமாய் இருமையற்று ஒன்றெனக் கலந்து ஐக்கியப்படுவேன். என்னையும் இப் பிரபஞ்ச வாழ்வையும் சேர்த்து முடிச்சிடும் அற்புதம் நீ என்று எனக்கென ஆவாய்? உன் அன்பற்ற வெளியில் ஜீவிதம் சுமையாகிறது. என் சுமை தாங்கியே, எனது வழிப் பயணத்தில் நீ எங்கே காத்திருக்கிறாய்? மழை நீர் கோர்த்த மரத்தடியில் நடக்கிற போது சிலீரென உதிர்ந்து மனஸைக் குளிர்விக்கின்ற பன்னீர் பூக்களாய் நீ தினமும் என் ஹ்ருதய பூமியை நனைக்கிறாய். ஆயிரம் ராகங்களைத் தன் கர்ப்பத்தில் தாங்கியிருக்கும் வீணையுன்னை மீட்ட மனமின்றி ஸ்வரங்களைத் தேடி மன வெளியில் நடந்து செல்கிறேன். காற்று அர்ச்சித்து விட்டுப்போன அபூர்வ புஷ்பங்களை மணல் ஊதிச் சேகரிக்கிறேன், உனக்கு மாலையாக்க.

தாகம் நெஞ்சைப் பிளக்கும் போதும் மழை வரும்வரை காத்திருக்கும் சாதக பட்சி பற்றி அறிவாயா நீ? உனக்கான காத்திருத்தலும் என் வரையில் அப்படித்தான். தாங்க முடியாத துயரம் தான். ஆனால் வேறு வழியில்லை. இந்த சோகங்கள் எனக்காகவே காத்திருக்கின்றதோ? வழியெங்கும் ஆண்டர்ஸன் ஆலயம் தவிர சுற்றிலும் வெயில் முகத்தை அவிக்கிறது. வயிறு ஒட்டி முகம் கருகி கால்களில் பலமற்று இந்த ஜனக் கூட்டத்தில் உன் முகத்தைத் தேடுகிறேன். அங்குமிங்கும் ஓடி ஓடி என் பிரிய நெஞ்சமே வேகாதே. வந்து விடுவாள், வரா விட்டாலும் நொறுங்கி விடாதே. இந்த ஏமாற்றமும் காத்திருத்தலும் தவிப்பும் என் அன்பு நெஞ்சமே உனக்குப் புதிதல்ல. அவள் வந்து விடுவாள். அவள் காணப் பறக்கிற விழிகளே...நெஞ்சு சுருண்டு துவங்கும் இந்த பசி வேதனை வலி உங்களைக் கலங்க வைத்து நீர் வழிய விடாமல் கொஞ்சம் பொறுங்கள். இது அழுவதற்கான நேரமல்ல. நீர் பொங்கி மங்கலாய் திரையிடும் நேரத்தில் அவள் தப்பிச் சென்று விட முடியும். ஒரு அனாதையைப் போல் ஒரு பிச்சைக்காரனைப் போல் பீச் ஸ்டேஷன் கவுண்டர் ஓரத்தூணில் சாய்ந்து கிடக்கும் இவன் நானா? இந்நேரம் அவள் வந்து கொண்டிருக்கும் எலக்ட்ரிக் டிரெயின் எக்மோரைத் தாண்டியிருக்கும் வயிற்றில் சுரக்கும் அமிலப் பசியே...உன்னைக் கவனிக்கவே போவதில்லை; அவள் வரும் வரைக்கும்.

தனக்கான கல்லறையை தானே கட்டிக் கொண்டு ஓலக்குரல் எழுப்புகிறேனோ? வீம்புக்காக உன்னிடமிருந்து ஏற்படுத்திக் கொண்ட பிரிவு இன்று நிஜமாகி விட்டது. ஒருவேளை இந்தப் பிரிவே என்னைக் கொல்லும் விஷமாகி எனக்கு மரணம் முடிவாகிப் போனால் முதலில்



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

நான் ஏராளமான இலக்கியப் பரிசுகள் வாங்கிக் குவித்திருக்கிறேன்! வண்ணத்துப் பூச்சியைப் போல் அற்பாயுள் படைத்த பரிசுகள்! ஆனால் நான் சம்பாத்தியம் செய்த பரிசு மகத்தானது! அந்தப் பரிசை பலர் ஏளனம் செய்கிறார்கள் எனினும் அதை அவர்களால் அடைய முடியாது.

கலைப்பணிவேள்வியாலும், சொந்தத் தேடுதலாலும், எழுத்து மணி களைக் கோர்த்த ஜீவ கீதமிசைப்பதாலும் நான் மக்களின் கவிஞனாக உருவானேன்! அது தான் நான் பெற்ற மிகச் சிறப்பான அரும்பெரும் பரிசாகும். பல்வேறு மொழிகளில் மொழி மாற்றம் செய்யப்பட்ட என்னுடைய வெவ்வேறு காவியப் படைப்புகளை விட, என்னுடைய கவிதைகளின் மறுசீரமைப்பும் விரிவுரைகளும் உட்கொண்ட அனைத்து நூல்களையும் விட, மகத்தானதும் இந்த பரிசே ஆகும்!

ஆம்; எனக்குரிய பரிசு என்னுடைய வாழ்க்கையின் சில அரிய நிமி டங்கள் தான். அதாவது 'லோட்டாவின்' பாதாளத்துக்குள்ளிருந்து, நைட்ரேட் சுரங்கத்திலிருந்து அல்லது செப்புக் கம்பிகளைக் கிடையி லிருந்து, அதுவுமில்லாவிட்டால் அசல் நரகத்திலிருந்தே முழங்காலில் ஊர்ந்தவாறு மேலே வந்து, விகாரமான முகமும், கலங்கிச் சிவந்த கண்களும், பம்பாஸின் வாடையுடன், ஒவ்வொருவராக உலோகத் தண்டு போன்ற கரங்களை நீட்டி,உங்களை எங்களுக்கு மிக முன்னரே தெரியும் உடன்பிறப்பே, என்று கூறும் அரிய நிமிடங்கள்! அதுவே என் கவிதையின் தலைப்பு!!

-பாப்லோ நெருடா

சிரிக்கிறவள் நீதானே? ஒரு சொட்டுக் கண்ணீர்கூட சிந்தப் போவதில்லை. உன் மௌனம் சொல்லும் சேதி இது. என் கண்ணீர் சலனப்படுத்த முடியாத உன் மனஸை என் மரணமா சலனப்படுத்த முடியும். இந்த வலியின் தீராத நினைவுகளோடு இருத்தலை விடவும், எல்லாம் மறந்துவிடும் மரணம் அழகானது தான். இந்த மரணத்தைத் தவிர்க் கும் பலம் உனக்குத்தான் உண்டு. இந்தக் கண்ணீரைத் துடைக்கும் கைகள் உனக்குத் தான் சொந்தம். ஆனால் இவற்றை எனக்கெனச் செய்யும் மனம் உனக்கில்லையா? ஒவ்வொரு நிமிஷமும் காலம் என் இருப்பைச் சாவுக் கல்லில் உரசிப்பார்க்கிறது. என்ன ஆயிற்று உனக்கு?

வாசலடைத்து வரைந்து வைத்த ரங்கோலிகோலத்தின் நடுவில் நிறுத்தியிருக்கும் சந்தனப் பிடிப்பில் நட்டு வைத்த செம் பருத்திப் பூவாய் என்னுள் இருந்த நீ எந்த சூரியன் எரிப்பில் கருகிப் போனாய்? கைமண்ணைக் கூட் டிக்கூட்டி ஒவ்வொரு செடியாய்ப் பூக்கட்டும் எனக் காத்திருந்த என் பூவனத்தை எப்போது புயல்



படிப்பகம்

www.padippakam.com

வந்து சூறையாடிப்போனது? ஏன் இப்படியெல்லாம் ஆனது? எந்தப் பாவம் என் நெஞ்சில் தீக் கங்குகளை வாரி இறைத்தது? கர்ப்பத்தில் ஒளிக் கனவுகளோடு கண்மூடி மிதந்த குழந்தையை மிதித்துக் கரைத்த பாவத்தை யார் எனக்குச் செய்தது? இதையெல்லாம் விழுங்கியடைத்துக் கொண்டு இங்கிருக்க முடியவில்லை. இந்த துயரங்களுக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்க ஒரு வார்த்தை என்னோடு பேச மாட்டாயா?

உன்னிடம் ஏன் எனக்கிந்த ஈடுபாடு. நீ வாழ்வை நேசிக்கக் கற்றுத்தந்திருக்கிறாய். என்னை நேசித்ததின் மூலம் என்னை எனக்குக் காட்டிக் கொடுத்தாய். இதுவே நிகழ்ந்திருக்கிறது. இந்த நன்றி உணர்ச்சியே பிரவாக அன்பாய் வெளிப் பாய்கிறது. நீ கரையாய் நீள்கிறாய். நான் உன்னைத்தழுவிக் கொண்டு நதியெனத் தொடர்ந்து வருகிறேன். என் திசையும் சங்கமமும் உன்னால் தீர்மானமாகிறது. நான் சொல்வதெல்லாம் உனக்குப் புரிகிறதா? புரிந்துதான் சிரிக்கிறாயா? ஏன் இப்படிச் சிரிக்கிறாய்? உன் சிரிப்பு எனக்குப் புரியவில்லை. ஆனால் இது சிரிப்பில்லை என்று புரிகிறது. பிறகும் நீ சிரிப்பது ஏன்? சிரிப்பது உன் இதழ்கள் மட்டுமா? அதென்ன விழிகளிலும் சிரிப்பு. எந்த ரகஸ்யத்தைச் சொல்ல ஓடி வந்திருக்கும் ஒளிச் சிதறல்கள் உன் விழிகள். ஒளி பெருகும் உன் விழிக்கசிவில் எப்படி வந்தது பயம்? பய மெதற்கு? என்ன பேச வேண்டு மென்று தவிக்கிறாய்? இதற்குப் பிறகும் பேச ஒன்றுமில்லை. எல்லாம் புரிந்த பின் பேசுவது எதற்கு? ஏன் நம்மிடையில் இந்த தாகம். தாகமே நதியெனப் பெருகுகிறதா? எது நம்மைப் பிரித்துப் போட்டது? மூலத்தில் இல்லாத கூறு இடையில் கரைகளென விரிந்து தொடர்பறுந்து விட்டதே... தொடர்பு படுத்தத் தான் நதி ஓடுகிறது. நம்மைத் தொட்டுக் கொண்டு, தொடுதலில் என்ன புரியும்? எல்லாமுமா? உன்னையும் என்னையும் நெருக்கி முடிகிற அனல் கயிறா அது?

அதில் எல்லாம் புரிந்து விடுமா? பிறகும் மிச்சமாய் ஒன்று கிடந்து கேள்வியாய் வளைந்து சீறுகிறதே? பதில் கூறித் தப்பிவிடும் பொறுப்பில்லாமல் உன் கவனம் எங்கு நின்று ஏங்குகிறது. கண்ணில் நீள்கிற ஒற்றையடித் தடத்தில் மனம் நொண்டியடிக்கிறதா? அது தடமல்ல, கட்டம். கண்மூடிக் கால் பதிக்கும் பாண்டிக்கூட்டம். கோட்டில் மிதித்தால் ஆட்டமிழந்து விடுவாய் கோடுகளைத் தாண்டிச் செல். கண்களைப் பாதமுனையில் மாற்றிக் கொள். பயப்படாமல் ஆட்டம் துவங்கு உன்னருகில் நான் இருக்கிறேன். தைரியமாயிரு. ■



படிப்பகம்

www.padippakam.com

# சேக்கிழார், கோபாலகிருஷ்ண பாரதியார்

எஸ்.தோதாத்ரி

"தெய்வத்தின் குரல்" ஆறாவது பகுதியில் 68ம் பக்கத்தில் இருந்து 75ம் பக்கம் வரை காஞ்சி சுவாமியார் ஸ்ரீ சந்திரசேகேந்திர ஸரஸ்வதி சங்கராச்சாரியார் நந்தனார் கதையைப் பற்றி சில கருத்துக்களைக் கூறியுள்ளார். அவரது கருத்துப்படி, கோபாலகிருஷ்ண பாரதியார் கற்பனை செய்து சேக்கிழார் கூறியுள்ள "திருநாளைப் போவார் புராணத்தை" மாற்றி விட்டார் என்பதாகும். அதாவது சேக்கிழார் "திருநாளைப் போவார்" சரித்திரத்தில் வேதியர் பாத்திரமே இல்லை. கோபாலகிருஷ்ணபாரதியார் தான் ஒரு "ஈவிரக்கமில்லாதப் ராமணப் பண்ணையாரிடம்" நந்தனார் படாத பாடு பட்டார் என்று நந்தன் சரித்திரத்தில் கூறுவதாக காஞ்சி சுவாமியார் கூறுகிறார். (68-69) அவர் கூறுகிறார்.

"கொடுங்கோல் ப்ராமணனை ஸ்ருஷ்டி பண்ணியதும் ஒரு பிராமணர் தான்-போன நூற்றாண்டில் இருந்த கோபாலகிருஷ்ண பாரதி என்கிற பெரியவர்" (69) இவ்வாறு மூலத்தில் இல்லாத முறையில் மாறுதல் செய்த காரணத்தினால் மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தன் சரித்திரக் கீர்த்தனைக்கு பாயிரம் அளிக்க மறுத்து, பின்னர் கொடுத்தார் என்பதையும் காஞ்சி சுவாமியார் கூறியுள்ளார் (71).இப்படி மூலத்தில் இருந்து வேறுபடும் கற்பனைக ளுக்கு ஒரு கட்டுப்பாடு தேவை என்றும் கூறுகிறார். இந்தக் கற்பனைச் சித்திரம் காரணமாக நந்தனார் கதை என்பது சேக்கிழார் கூறியது போல் இல்லை.அது ஒரு பிராமணனைக் கொடுங்கோலனாக, ஈவுஇரக்கமில் லாதவனாகக் காட்டுகிறது. இந்தக் கதையைத்தான் இன்று மக்கள் நம்புகின்றனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கூற்றில் உண்மையும் இருக்கிறது. அதே சமயத்தில் ஒரு பிராமணியப் பார்வையும் இருக்கிறது. கோபாலகிருஷ்ண பாரதி ஒரு வேளை ஒரு பிராமண .ஆண்டையைக் கற்பனை செய்யாமல் வேளாளரை ஆண்டையாகக் காட் டியிருந்தால் காஞ்சி முனிவரின் பதில்



படிப்பகம்

www.padippakam.com

என்னவாக இருக்குமோ தெரியாது. கோபாலகிருஷ்ண பாரதியார் நந்தனாரின் பண்ணையாளராக ஒரு வேதியரைத்தான் காட்டுகிறார். அவரை பண்ணையர்த்தனம் உள்ள ஒருவராகப் படைத்துக் காட்டுகிறார் என்பது உண்மைதான். சேக்கிழார் இவ்வாறு செய்யவில்லை என்பதும் உண்மைதான். இந்த இரண்டு கூற்றையும் சற்று ஒப்பிட்டு ஆராய்வது அவசியமும் கூட.

கோபாலகிருஷ்ணபாரதியைக் காண்பதற்கு முன்னர், சேக்கிழாரைக் காண வேண்டும். சேக்கிழார் 'பெரியபுராணம்' சோழர்கள் காலத்தியது. அதில் அக்காலத்திய சமூக நிலையை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவர் திருநாளைப் போவார் கதையை அவருக்கு முன்பிருந்தவர்கள் குறித்து வைத்ததைக் கொண்டு எழுதுகிறார். கோபால கிருஷ்ணபாரதியாருக்கு சேக்கிழார் நூலும், உபமான்யர் கதையும் எவ்வாறு முன்னோடிகளோ அதே போன்று சேக்கிழாருக்கு திருத்தொண்டர் தொகை முன்னோடியாக இருந்தது. திருத்தொண்டர் தொகையில் குறிப்பால் உணர்த்தியதை சேக்கிழார் விரித்துக் கூறுகிறார். இவ்வாறு விரித்துக்கூறும் போது அவர் பல மாறுதல்களைச் செய்திருக்கலாம். இது இயல்பு.

சேக்கிழாரது சித்திரம் அவரது காலம், அவரது வர்க்கச் சூழ்நிலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. சேக்கிழாரது காலத்தினைப்பற்றி இன்று ஐயம் எதுவும் இல்லை. சோழ ஏகாதிபத்தியம் கொடி கட்டிப் பறந்த காலம் நிலப்பிரபுத்துவ அமைப்பு நெறிப்படுத்தப்பட்டு, அதன் ஜாதீய அமைப்பு முறை துல்லியமாக வரையறுக்கப்பட்ட காலம் அது. சோழ ஏகாதிபத்தியத்தின் கால கட்டத்தில் கலைகள் வளர்ந்து செழித்தது. அதே சமயத்தில் கீழ்க்கண்ட மக்கள் அடிமைப்பட்டு அவல வாழ்வு நடத்திக் கொண்டிருந்தனர். இதையும் மறுக்க முடியாது. மேல் சாதிக்காரர்கள், சாதீய நெறிமுறைகள் அணுபிசகாமல் பின்பற்றிய காலம் இது. மனு நீதி சமூக ஒழுக்கத்தின் எழுதப்படாத சாசனமாக விளங்கிய காலம் இது. சைவசமயம் இராசாங்க மதம் எனக் கருதப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் சேக்கிழாரது சொந்த வாழ்க்கையே ஒரு நிலப்பிரபுவின் வாழ்க்கையாகும். அவர் குன்றத்தூர் வளநாட்டைச் சார்ந்தவர். சைவ மரபின் கண் வந்த வேளாண்குடியினர். சேக்கிழார் குடியைச் சார்ந்தவர். அநாய சோழனின் மந்திரியாக இருந்தவர். அமைச்சர் என்ற முறையில் அரசனுக்கு ஆலோசனை கூறுவது மட்டுமல்லாமல் நாட்டின் சமூக நீதியைக் காக்கும் பொறுப்பும் அவரிடம் இருந்தது. அவரது சமூக நீதி என்பது வர்ண தர்மம் சிதையாமல் பாதுகாப்பது என்பது. அதாவது பல்வேறு சாதிகளைக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்ட அக்காலத்தில் சமூக அமைப்பு சுமூகமாக இயங்க வேண்டுமானால், அந்த அமைப்பில் முரண்பாடுகள் முற்றாமல் இருக்க வேண்டும். கீழ்ச் சாதிக்காரர்கள் மேல் சாதியினரை எதிர்க்காமல் இருக்க வேண்டும். சிறு எதிர்ப்பு எந்த வடிவத்தில் வெளிப்பாட்டாலும், அது கொடுமையாகத் தண்டிக்கப்பட்டது. இத்தண்டனை அளிப்பதில் வருண தர்மத்தில் மேல் வருணத்தவர் அனைவரும் ஒன்றுபட்டு அடிநிலையில் உள்ள மக்களை அடக்கியே வைத்திருந்தனர். இந்தச் சமூக அமைப்பில் இருந்து வேறுபடுபவர்களுக்குக் கடும் தண்டனை வழங்கப்பட்டது என்பதை இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் ஆகியனவற்றில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

சேக்கிழார் நந்தன் சரித்திரத்தினை எழுதும் பொழுது அதனை இந்த முரண்பாடுகளுடன் கூறியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு அவர் செய்யவில்லை என்பதை "திருநாளைப் போவார் புராணம்" படிக்கும் வரலாற்று உணர்வு உள்ளவர்கள் புரிந்து கொள்வர். அவர் நந்தன் கதையில் நந்தன் படும் துன்பங்களைக் கூறும் அளவிற்கு நந்தனைக் கொடுமைப் படுத்திய பண்ணையாரைப் பற்றிக் கூறவில்லை. அவர் பறைச் சேரியை வர்ணிக்கிறார். அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கூறுகிறார். புலைச்சியர்கள் கள் உண்டு களிப்பதைக் கூறுகிறார். நந்தனாரின் குலத் தொழிலைக் கூறுகிறார். நந்தனார் ஓரளவிற்குச் சுதந்திரம் உள்ள புலையர். பறைத்துடைவை உணவு உரிமை உடையவர். அதாவது கிராமத்தின் மூலம் அவருக்கு சிறிது நிலம் கொடுக்கப்பட்டு, அதில் பயிர் செய்து பிழைப்பவர். அது தவிர கோரோசனை, வார், தோல் ஆகியவற்றைத் தயார் செய்து விற்பவர் சிவபக்தி மேலீட்டால் இவற்றை சிவன் கோயில்களுக்கு இலவசமாக அளித்தார் என்று சேக்கிழார் கூறுகிறார். அந்தப்பாடல் பின்வருமாறு:

"ஊரில் விடும் பறைத்துடவை
உணவுரிமையாகக் கொண்டு
சாப்பில் வரும் தொழில்
செய்வார் தலைநின்றார்
தொண்டினால்,
கூரிய முக்குடுமிப் படை
யண்ணல் கோயில் தொறும்
பேரிகையே முதலாய முகக்
கருவி பிறவினுக்கும்
போர்வைத் தோல் வீசிவார்
றினையனவும் புகலும் இசை
நேர் வைத்த வீணைக்கும்
யாழுக்கும் நிலை வகையில்
சேர்வுற்ற தந்திரியும்
தேவர்பிரான் அர்ச்சனைகட்கு
ஆர்வத்தி னுடன் கோரோ
சனையும் இவை அளித்தார்"

இவை யாவும் நந்தனாரது குலத்



படிப்பகம்

www.padippakam.com

தொழில். பக்தி மேலீட்டால் இவற்றை சிவன் கோயில்களுக்கு அர்ப்பணிப்பதாகச் சேக்கிழார் கூறுகிறார். காஞ்சி முனிவர் நந்தனார் இத்தொழில்களைச் செய்யவில்லை என்று கூறுகிறார். அவர் எழுதுகிறார்.

''தீண்டாதவர்கள் தான் வாத் தியங்களுக்கான தோல், வார், தந்தி, மாட்டு வயிற்றில் இருந்து எடுக்கும் கோரோசனை முதலிய வற்றில் வியாபாரம் பண்ணுவது. இவரோ பிறந்ததிலிருந்து மறந்தும் சிவசிந்தனை தவிர வேறே இல்லாதவர் என்று சேக்கிழார் சொல்லியிருக்கிறார்'' (69) காஞ்சி முனிவரின் இக்கூற்று சேக்கிழாரின் பெரிய புராணத்திற்கு முரண்படு வதாகும். நந்தனார் குலத் தொழிலைச் செய்து கொண்டு தான் பக்தி செய்தார் என்பது சேக்கி ழார் கூற்று. அந்தக் குலத்தில் பிறந்ததினால் அவர் இன்னல் களுக்கு ஆளானார் என்பதை சேக்கிழார் விரிவாகக் கூறாவிட்டா லும், அதை இரு இடங்களில் சுட்டிக் காட்டுகிறார். அந்த இடங் களில் ஒன்று சிதம்பரத்திற்குள் நந்தனார் புகுவது. சேக்கிழாரை ஒட்டித் தான் கோபாலகிருஷ்ண பாரதியும் அவரது கீர்த்தனை களை அமைக்கிறார். சேக்கிழார் நந்தனாரது தில்லைப் பயணத் தைப் பற்றி கூறுகிறார். அவரது குலம் தில்லை போவதற்கு இடம் தரவில்லை. எனவே போக முடிய வில்லையே என்று வருந்துகிறார். தன் குலத்தை நினைத்து வருந்துகிறார். அதை மீறி அவரால் எதுவும் செய்ய முடியவில்லை. அவர் ஓரளவிற்குச் சுதந்திரமான புலையராக இருந்தாலும், அவரும் அடிமை போல் தான் நடத்தப் பட்டார். இது அந்தக் காலத்திய புலையர் எல்லோருக்கும் பொது வானது. கீழ் சாதிக்காரர்கள் எல் லோரும் இந்த விதிக்கு உட் பட்டவர்தான். எனவே வர்ண தர்மம் விதித்த முறைகளுக்கு எதி ராக அவரால் ஒன்றும் செய்ய முடி யவில்லை. சேக்கிழார் கூறுகிறார்.

''நாளைப்போவேன் என்று
நாள்கள் செலத் தெரியாது
பூளைப்பூ வாம்பிறவிப் பிணிப்
பொழியப் போவாராய்...''

இந்த அவலம் அவருக்குத் தோன்றுவதற்குக் காரணமே கீழ்கடை சாதி மக்கள் எல்லோருக் கும் பொதுவானது.

இந்த நிலையை சேக்கிழார் மற்றொரு இடத்திலும் விரித் துரைக்கிறார். நந்தன் தில்லையை அடைந்த பிறகு அந்த ஊரினுள் புக அஞ்சுகிறார். இங்கு அவர் குலம் தடையாக இருப்பதைச் சுட்டிக் காட்ட சேக்கிழார் தயங்கவில்லை. தில்லை வாழ் அந்தணர்கள் அங்கு உள்ள விதிமுறைகளுக்குப், பொறுப் பானவர்கள். அவர்கள் இருக்கும் வீதி வழியாகச் சென்றால் சமூக ஒழுங்கே கெட்டு விடும். காஞ்சி முனிவர் கூறியபடி சுதந்திரமா னவர் என்றால் தில்லைக்குள்



படிப்பகம்

www.padippakam.com

சுதந்திரமாக நுழைய வேண்டும். அவ்வாறு இல்லை. ஊருக்குள்ளே இந்த வேதியர்களை மீறி எவ்வாறு போக முடியும் என்று வருந்தி ஊருக்கு வெளியே தங்குகிறார். இந்த அவலம் ஆண்டான்-அடிமை உறவின் வெளிப்பாடு. வேதியர்கள் ஆண்டைகளுக்கு ஆண்டைகளாக இருந்ததினால் அவர்கள் என்ன செய்வார்களோ என்ற அச்சம் காரணமாக ஏற்பட்டது. சாதீயக் கட்டுப்பாடுகளை மீறும் பொழுது அவர்கள் என்ன தண்டனை அளிப்பார்கள் என்பது வரலாறு அறிந்த உண்மை. இதை மறைக்க முடியாது. ஆனால் இதை கோபாலகிருஷ்ணபாரதி கூறியது போன்று விவரமாகச் சேக்கிழார் கூறவில்லை. ஆனால் கூறாமலும் இருக்க முடியவில்லை. அந்தப் பகுதியை சுட்டிக்காட்டி விட்டு மட்டுமே சேக்கிழார் சென்று விடுகிறார். குறிப்பால் உணர்த்தும் அந்தப் பாடல் பின் வருமாறு.

''செல்கின்ற போழ்தந்த திருவெல்லை பணிந்தெழுந்து
பல்குஞ்செந் தீவளர்த்த பயில் வேள்வி எழும்புகையும்
மல்குபெருங் கிடையோது மடங்கள் நெருங்கினவுங் கண்டு
அல்குந்தம் குலநினைந்தே அஞ்சி அணைந் திலர் நின்றார்''

இதன் பிறகுதான் இரண்டாவது கட்டமாக நந்தனுக்கு அளிக்கப் படும் சோதனை. இது மற்ற அடியார்களுக்கு இல்லாத சோதனை. நெருப்பில் மூழ்கவைத்து நந்தனுக்கு முக்தி அளிக்கிறார் சிவ பெருமான். இந்த நிகழ்ச்சியிலும் பங்கு பெறுவது அந்தணர்கள் மட்டுமே. மற்ற சாதிக்காரர்கள் அல்லர். தில்லை வாழ் அந்தணர்கள் முன்னிலையில் நந்தன் எரியூட்டப்படுகிறான். அதன் பின்னர் நந்தன் பெறும் வடிவம் அந்தணர் வடிவம் தான்.

''செந்தீமேல் எழும்பொழுது
செம்மலர்மேல் வந்தெழுந்த
அந்தணன் போல்
தோன்றினார்''

இந்த இரண்டு இடங்களில் வேதியர்களது பங்கைச் சேக்கிழார் சுட்டிக் காட்டுகிறார். இதை இல்லை என்று கூற முடியாது. அவர்களது ஆதிக்கத்தை மீறி எதுவும் செய்து விட முடியாது என்ற உண்மையை சேக்கிழார் இந்த இடங்களில் காட்டுகிறார்.

கோபாலகிருஷ்ணபாரதியைப் போன்று ஒரு வேதியரை பாத்திரமாகப் படைத்து, அவர் அடிமைகளைத் துன்புறுத்துவது போன்று சேக்கிழார் காட்டவில்லை. அதற்கு ஒரு முக்கியக் காரணம் இருக்கிறது. சேக்கிழார் ஆளும் வர்க்கத்தைச் சார்ந்தவர். தமிழக நில உடை அமைப்பில் பிராமணர்களும் ஆளும் வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் தாம் அவர்கள் அனைவரும் வர்ண தர்மப்படி மேல் சாதிக்காரர்கள். அதாவது ஆதிக்க சக்திகள். ஆளும் வர்க்கத்தைச் சார்ந்த சேக்கிழாருக்கும்,



படிப்பகம்

www.padippakam.com

அதே வர்க்கத்தைச் சார்ந்த பிராம ணர்களுக்கும் வர்க்க சமரசம் உண்டு. அதே சமயத்தில் முரண் பாடும் உண்டு. அவர்களுக் குள்ளே நிகழும் அகப் போராட் டத்தில் இந்த முரண்பாடு தெளி வாகப் புலப்படும். ஆனால் புற எதிரியைச் சந்திக்கும் பொழுது இவர்களது வர்க்க முரண்பாடு சற்று பின்னடையும். எனவே தான் சேக்கிழார் வேதியர்களது பங்கை கோபாலகிருஷ்ண பாரதி கூறியது போன்று விரிவாகக் கூறவில்லை. அதைத் தொட்டுக் காட்டிச் சென்று விடுகிறார். சேக் கிழாரது நிலை ஆதிக்க சக்திகளின் நிலை ஆகும். இந்தப் பின்ன ணியில் அணுகும் பொழுதுதான் சேக்கிழாருக்கும், கோபால கிருஷ்ண பாரதிக்கும் உள்ள வேறு பாடு தெரியவரும். காஞ்சி முனி வரைப் போன்று பிராமணியப் பார்வையில் அணுகும் பொழுது, சமூக வரலாறு என்பது பின்னுக் குத் தள்ளப்பட்டு விபரீதமான முடிவுகளுக்குச் செல்ல நேரிடும்.

சேக்கிழாரிடம் இருந்து கதையை பாரதி எடுத்துக் கொண்டு மாற்றி விட்டார் என்று காஞ்சி முனிவர் கூறுகிறார். ஆனால் நந்தன் சரித்திரக் கீர்த்த னையில் பாரதி இரண்டு மூலங் களை எடுத்துக் கையாளுகிறார். ஒன்று சேக்கிழார், இரண்டு உப மன்யை முனிவர் கூறும் நந்தன் வரலாறு. இந்த இரண்டும் நந்தன் சரித்திரக் கீர்த்தனையில் இணைக் கப்பட்டுள்ளது. உபமன்னிய முனிவர் கூறும் வரலாறு பற்றி காஞ்சி முனிவர் ஒன்றும் கூற வில்லை. ஏனென்றால் அதில் வர்ணதர்மத்தைப் பற்றிய அருமையான விமர்சனம் இடம் பெறுகிறது.

நந்தனார் கதையைக் கீர்த்தனை களாகக் கூறும் பொழுது இடை யிடையே உபமன்னிய முனிவர் கூற்றும் இடம் பெறுகிறது.

''பரமசிவ பக்தி பண்ணாத சதுர்வேத பாரங்கதனா யிருக்கின்ற பிராமணனைப் பார்க்கிலும், பரம சிவ பாதாரவிந்த பக்தி பண்ணு கிறவன் பறையனாயிருந்தாலும், பதினான்கு லோகத்தையும் பரி சுத்தம் பண்ணுவானென்று உப மன்னிய முனிவர் சொல்ல...''(பக் 5) ''இப்படியே பக்தி செய்தாலும் போதும், மற்ற ஜாதி வருணாசிர மங்களினாலே ஒன்றும் பிர யோசனமில்லையென்று கூறி உபமன்னியர் ஓர் இதிகாசத்தைச் சொல்லுகின்றார் (பக். 8) இந்த இரு மேற்கோள்கள் கோபால கிருஷ்ண பாரதியின் சிந்தனை எந்த நோக்கில் சென்று கொண்டிருந்தது என்ப தைக் காட்டப் போதுமானது.

கோபாலகிருஷ்ண பாரதியின் காலம், சேக்கிழார் காலத்தில் இருந்து வேறுபட்டு விடுகிறது. சேக்கிழாரது காலம் பக்தி மார்க்கக் காலம் முடிவடைந்து தத்துவப் போராட்ட காலத்தைச் சார்ந்தது. கோபாலகிருஷ்ண பாரதியின் காலம் இன்றைக்கு 50 ஆண்டு



படிப்பகம்

www.padippakam.com

களுக்கு முற்பட்டது. அந்தக் காலம் என்பது நில உடைமைச் சமூகத்தின் மையம் தகர்க்கப்பட்டு, தடியெடுத்தவன் தண்டல்காரன் என்று இருந்த காலம். நாயக்கர்களது ஆட்சி முடிவு பெற்று நவாப்புகள் தமிழகத்தை ஆண்ட காலம். பிரஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் ஆகியோர் ஆதிக்கப் போட்டி நடத்திக் கொண்டிருந்த காலம் அது.சாதீய அமைப்பு முறை மிகக் கொடூரமாகப் பின்பற்றிய காலமும் அது. சோழர்கள் காலந்தொடங்கி, நாயக்கர்கள் காலம், மராட்டிய மன்னர்கள் காலம் ஆகியவற்றில் சமூகத்தின் ஆதிக்க சக்திகள் அவர்களது நிலையை உறுதிப்படுத்திக் கொள்ள, சாதிய விதிமுறைகளில் பல திருத்தங்கள் செய்து அநேகமாக கீழ் சாதியினர் அனைவரையும் அடிமைகளாக நடத்திய காலம். இந்தக் கால கட்டத்தில் தான் மனித நேயச் சிந்தனை வளரத் தொடங்கியது. இந்தச் சிந்தனையானது ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர்கள் வரவால் ஏற்பட்டதன் கலப்புச் சிந்தனையாக உருவெடுத்தது எனலாம். இந்த மனிதநேயச் சிந்தனையில் கடவுள், மதம் ஆகிய மையங்களில் இருந்து விலகி மனிதனை மையமாகக் கொண்டு உலகத்தைக் காணும் போக்கு இடம் பெற்றது. ஆனால் இது முற்றிலுமாக இங்கு வலுவாகாத நிலையில் இருந்தது. மனிதனை மையமாகக் காணும் போக்கு இங்கு மதவடிவத்தில்தான் வெளிப்பட்டது எனலாம்.

இந்தக் காலகட்டத்தில் தோன்றிய கோபாலகிருஷ்ண பாரதியார் சேக்கிழாரிடம் இருந்து முற்றிலும் வேறுபட்டவர். ஒரு சாதாரண பிராமணக் குடும்பத்தினர். அவருக்குச் சற்று வசதியிருந்தும், தினசரி உஞ்சவிருத்தி எடுத்து அவருடைய வாழ்நாளைக் கழித்தவர். இசையில் அதிக நாட்டமுள்ளவர். பல ஊர்களைச் சுற்றியவர். அதன் விளைவாக அவருக்கு கீழ்கடை மக்களை அறியும் வாய்ப்பு இருந்தது. இதன் விளைவாக உருவான மனிதநேயம், ஒரு ஆண்டையின், கொடூரத் தன்மையை விவரிக்க உந்து விசையாக இருந்தது. அவரது படைப்பினைப் பற்றிக் கேள்விப்பட்ட பிரஞ்சு அதிகாரியான சீசய்யா என்பவர் நந்தன் சரித்திரக் கீர்த்தனையை அச்சிட்டு வெளியிட்டதாக அவர் வரலாறு கூறுகிறது. அதுமட்டுமல்ல இவர் 'திருநீலகண்ட நாயனார்', 'இயற்பகை நாயனார்', 'காரைக்கால் அம்மையார்' ஆகியோர் சரித்திரங்களைக் கீர்த்தனையாகப் பாடியுள்ளார். இவரது மனிதநேயம் பற்றி காஞ்சி முனிவரே கூறுகிறார்.

'அவர் ஏழை எளியவர்களிடம் ரொம்பவும் இளகின சுபாவம் உடையவராக இருந்திருக்கிறார். அந்த நாளில் அந்தச் சீமையில் மிராஸ் பண்ணும் பிராமணர்களில் ஒருத்தர், இரண்டு பேர் உழவு செய்யும் ஆள்காரர்களை ரொம்பவும் கொடுமைப்படுத்தியதையும் அப்படியும் அந்த எளிய ஜனங்கள் எதிர்த்துச் சண்டை



படிப்பகம்

www.padippakam.com

போடாமல் 'இப்படித் தான் நம் ஜன்மா' என்று விவாதித்துக் கொண்டு இருந்து வந்ததையும் அவர் பார்த்தார்.'(70)

இந்த மனிதாபிமானம் சேக்கிழார் காலத்தியது அல்ல. கம்பனிடம் காணப்படும் மனித நேயத்தை சேக்கிழாரிடம் காண முடியாது என்பதை இரு இலக்கியங்களையும் கற்றவர்கள் ஏற்றுக் கொள்வர். பாரதி காலத்தில் மனிதநேயம் துளிர்விடத் தொடங்கியது. அதன் காரணமாக அவர் ஆண்டான் - அடிமை உறவின் அடிப்படையில் வேதியர் பாத்திரத்தைப் படைக்கிறார். இது வேதியர்களைக் கொடுமைக் காரர்களாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் படைக்கப்பட்டது அல்ல. பண்ணையார்கள் எந்த ஜாதிக்காரர்களாக இருந்தாலும் அவ்வாறு தான் இருந்திருக்கிறார்கள். பறைத்துடவைப் பறையனாக இருந்தாலும் சரி அடிமைப் பறையனாக இருந்தாலும் சரி, அந்த சாதியில் பிறந்ததனாலேயே மேல் சாதிக்காரர்களால் அடிமைகளாகவே தான் நடத்தப்பட்டனர். இதைத் தெரிந்து கொண்டுள்ள கோபாலகிருஷ்ண பாரதியார் சாதியக் கொடுமைகளை அப்படியே வர்ணிக்கிறார். சேக்கிழாரது நிலை அவ்வாறு வர்ணிக்க இடம் தரவில்லை. கோபால கிருஷ்ண பாரதிக்கு சேக்கிழாரது வர்க்க நிலைப்பாடு இல்லை. அவர் சாதியால் பிராமணராக இருந்தாலும், அதிலிருந்து வேறுபட்டு சிந்தித்தவர். அவரது வாழ்க்கை வரலாற்று விவரங்கள் அதிகமாகக் கிடைக்கவில்லை. ஒரு வேளை, மகாகவி பாரதியைப் போன்று சுயஜாதியில் இருந்து பிரித்துக் கொண்டு சிந்தித்த மனிதனாக அவர் உருவாகியிருக்கலாம். இதன் காரணமாக அவர் பார்வையே வேறுபட்டிருக்கலாம்.

இந்தப் பின்னணியில் கோபால கிருஷ்ண பாரதியை அணுகினால் அவரது படைப்பிற்கும் சேக்கிழாருக்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்ள முடியும். காஞ்சி முனிவர் கூறுவது போன்று கோபாலகிருஷ்ண பாரதி செய்த மாறுதல் வெறும் கற்பனை அல்ல. சமூக அமைப்பின் உண்மையை உள் வாங்கிக் கொண்டு எழுந்த கற்பனைப் படைப்பு. அது சமூக உண்மையை எடுத்துக் காட்டுகிறது. பாரதியின் கதையை கற்பனை எனக் கூறும் காஞ்சி முனிவர், சேக்கிழாரை 'அத்தாரிட்டியாக'க் காட்டுகிறார். உண்மையில் சேக்கிழாரும் கற்பனை செய்தவரே தாம். திருத் தொண்டர் தொகையில் உள்ள சுருக்கத்தை சேக்கிழார் அவர் நிலையில் இருந்து கற்பனை செய்து விரித்துரைத்தார். அவருக்குப் பின்னர் வந்த கோபாலகிருஷ்ண பாரதி மனித நேயக் கண்ணோட்டத்தில் அதனை விரித்துக் கூறினார். இந்த முறையில் தான் இவர்களை அணுக வேண்டும். வேதியர் பாத்திரத்தை மட்டும் வைத்துக் கொண்டு அணுகுவது ஒருதலைபட்சமான பார்வையாகும். ■

www.padippakam.com

சிறுகதையை எப்படி துவக்குவது என்பதை விடவும், எந்த இடத்தில் துவக்குவது என்பது முக்கியமான பிரச்சினையாகும். இந்த இடத்தில் தான் ஒவ்வொரு படைப்பாளியும் இடறிப்போனது தெரியாமல் திகைத்துப் போய்க்கிடப்பான். படைப்பாளியைப் புலம்பவைக்கிற இடமும் இதுதான்.

-மேலாண்மை பொன்னுசாமி

''சிறுகதை படைப்பின் உள் விவகாரம்''- பக்.96 .

தி.க.சி: நீங்க பேசுறது எல்லாம் அனார்க்கிஸம் தான்

கண்ணன்: அனார்க்கிஸம்னா என்னன்னு தெரியல. கொஞ்சம் தெளிவுபடுத்துங்க.

தி.க.சி: நீங்க பேசுறதுதான் அனார்க்கிஸம். உங்க அப்பா வந்து மனித மேன்மையைப் பத்தி பேசறாரு. நீங்க ஒடைக்கணும் ஒடைக்கணுங்கறீங்க. இந்த மாதிரி ஒரு மனிதாபிமானிக்கு இப்படி ஒரு பிள்ளை பிறந்திருக்கேன்னு எனக்கு வருத்தமாயிருக்கு. (-காலச்சுவடு - இதழ் 16)

## சங்கமம்

'கப்பலோட்டிய தமிழன்' படத்தை என்னால் பார்க்க முடியவில்லை; காரணம் கண்ணீர் நிரம்பி என் கண்கள் குளமானதினால், அந்தப் படம் தோல்விப் படம்.

'உன்னைப் போல் ஒருவன்' படத்தை பலமுறை பார்த்தேன். கர்னாடக சங்கீதம் கேட்பது போன்று சுவைத்தேன். அதுவும் ஒரு வாரத்திற்கு மேல் ஓடவில்லை.

'ஆலயம்' என்ற படத்தைப் பார்த்தேன் தற்செயலாக. அருமையான படம். எனக்கு அருமை என்றால் அது தோல்வியாகத்தானிருக்க வேண்டுமென்பது இன்றைய தமிழகத்தின் விதியாக இருக்கிறது.

- தோழர் பாலதண்டாயுதம்

(கண்ணதாசன்.1969)

பிரபல எழுத்தாளர் ருட்யார்ட் கிப்ளிங் இறந்து விட்டதாக ஒரு பத்திரிகை, செய்தி வெளியிட்டு விட்டது. அதைப் படித்த ருட்யார்ட் கிப்ளிங் அந்தப் பத்திரிகைக்கு கீழ்கண்டவாறு பதில் எழுதினார்:

''தங்கள் பத்திரிகையில் நான் இறந்துவிட்டதாக எழுதியிருக்கிறீர்கள். தாங்கள் எந்தச் செய்தியையும் தீர விசாரித்து உண்மையை எழுதுபவர்கள். அதனால் நான் இறந்த செய்தி உண்மையாகத்தான் இருக்க வேண்டும். நான் இறந்து விட்டதாக தங்கள் மேலான பத்திரிகையின் சந்தாதாரர் பட்டியலில் இருந்து என் பெயரை அடித்து விடவும்''

-''சுபமங்களா''

-ஏப்ரல் 91



படிப்பகம்

www.padippakam.com

## அறிவுமதியின் 'தீ மிதித்தல்' துண்டுப் பிரசுரத்தின் சில பகுதிகள்-

'தீ மிதித்தல்' என்பது தொன்ம நம்பிக்கைகளின் தொடர்வழிச் சிந்தனைகளைச் சார்ந்த ஒன்று. தொன்ம நம்பிக்கை என்பது மலைசார்ந்த காடுகளில் வேட்டையாடி வாழ்ந்த காலகட்டங்களில் தோன்றிய நம்பிக்கை என்று பொருள். எனவே வாழ்வியல் நோக்கிலும்... இனவியல் நோக்கிலும் தீ மிதித்தலை காட்டுமிராண்டித்தன நம்பிக்கைகளின் தொடர்பானது என்று கூறுவதில் தவறில்லை.

குறிஞ்சியில் விலங்குகளை வேட்டையாடி.... முல்லையில் விலங்குகளை வளர்த்துப் பழகிய காட்டுமிராண்டிகளின் பேரர்கள்தாம் நாங்கள். நேரே... குழாய்ச் சட்டைப் போட்டுக் கொண்டு, முடி வெட்டிக் கொண்டு ...உதட்டில் 555 பற்றவைத்துக் கொண்டு பிறந்தவர்களல்ல நாங்கள்.

எவ்வளவுதான் காலமாற்றங்களுக்கேற்ப நாம் முன்னேற்றமடைந்தாலும் நமது முன்னோர்களாகிய காட்டுமிராண்டிகளுக்குரிய தொன்ம நம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும் நம்மிடம் தொடர்ந்து வந்து கொண்டு தான் இருக்கும். உயிர்த்துளிகளின் தொடர் விளைச்சல்கள்தாமே நாம்.

காடுகளை விட்டுவிட்டு வெகுதூரம் வந்துவிட்ட நம்மை நம் மனது, வீட்டிற்குள் பிளாஸ்டிக் குரோட்டன்சுகளையாவது வைத்து அழகுபார் என்று தூண்டிவிடுவது காட்டுமிராண்டித்தனத்தோடு தொடர்புடையது தான்.

தண்ணீருடனான நெருங்கிய உறவை இழந்து... ஒருகுடம் தண்ணீருக்குள் குளிக்கப் பழகிப் போன நம்மை, நம் மனது கண்ணாடித் தொட்டிக்குள் மீன்களை விட்டு அழகுபார் என்று தூண்டிவிடுவதும் காட்டுமிராண்டித்தனத்தோடு தொடர்புடையதுதான்.

மேற்குறிப்பிட்டவை போன்ற சில காட்டுமிராண்டித்தனங்கள், சில மாற்றங்கள் பெற்றோ, பெறாமலோ நம் வாழ்வோடு கூடவருவதில் தவறில்லை. அவ்வாறே சில காட்டுமிராண்டித்தனங்களைக் கால வளர்ச்சிக்கேற்ப நிறுத்திக் கொள்வதிலும் தவறில்லை.

இதில் ஆத்திகர் மனம் புண்படும்,நாத்திகர் மனம் புண்படும் என்று கூறுவதில் அர்த்தமில்லை.

*

பெரியம்மை என்கிற நோயின்போது காட்டுமிராண்டிக்கால நம்பிக்கைகளை வைத்திருந்த எம் ஆத்திகத் தமிழர்கள் அவற்றையெல்லாம் விட்டுவிட்டு இன்று மருத்துவ உதவிகளால் முற்றிலுமாக அந்த நோயை ஒழித்துவிடவில்லையா?

கொத்துக் கொத்தாக உயிர்களைப் பறித்துக் கொண்டிருந்த காலரா இன்று எங்கே? இளம்பிள்ளைவாத நோயின் கொடுமை எங்கே? இதற்கெல்லாம் காரணம் கடவுள் நம்பிக்கையா? மருத்துவ் வளர்ச்சியா?

மாடு வெட்டி, ஆடு வெட்டி, பன்றிவெட்டி ஏன் தன் தலையைத் தானே வெட்டி வழிபாடு செய்த காட்டுமிராண்டிக்கால சடங்குகளையெல்லாம் மெல்ல



படிப்பகம்

www.padippakam.com

மெல்ல மறந்துவிட்டு எலுமிச்சம்பழம் அறுக்கவும், தேங்காய் உடைக்கவுமாக வழிபாட்டுச் சடங்குகளை மாற்றிக் கொள்ளவில்லையா? அதற்காக எங்கள் கடவுள்கள் எவரும் எங்கள் மீது கோபித்துக் கொள்ளவில்லையே?

*

இதற்கெல்லாம் பொறுப்போடு பதில் சொல்கிறார் தந்தை பெரியார்.

பகுத்தறிவு என்று சொல்வதும் மாறிமாறி வருவதாகும். இன்று நாம் எவை எவற்றை அறிவுக்குப் பொருத்தமானவை என்று எண்ணுகிறோமோ அவை நாளைக்கு மூடப்பழக்கங்கள் எனத் தள்ளப்படும். நாம் கூட பல பொருள்களை, ஏன் மகான்கள் என்று புகழப்படுபவர்கள் சொன்னவற்றையே ஒதுக்கிவிடுவோம். அதுபோலத்தான் நமது பின்னோர்கள் என்னைக் குறித்தும்கூட ஒரு காலத்தில் ''ராமசாமி என்ற மூடக்கொள்கைக்காரன் இருந்தான்'' - என்று கூறலாம். அது இயற்கை. மாற்றத்தின் அறிகுறி. காலத்தின் சின்னம். பழைய காலத்தைச் சேர்ந்தவை என்பதற்காக நாம் குறைகூறவில்லை. அவர்கள் காலத்திற்கு அவர்கள் செய்தது சரி என்பதனாலும், அப்போது அவர்களால் அவ்வளவுதான் முடிந்தது என்பதனாலும் இன்று மாறித்தான் ஆக வேண்டும். சிக்கிமுக்கிக் கல்லால் முதலில் நெருப்பை உண்டாக்கியவன் அந்தக் காலத்து 'எடிசன்'.அப்புறம் படிப்படியாக முன்னேற்றமாகி இப்போது மின்சாரத்தில் நெருப்பைக் காண்கிறோம். எனவே, மாற்றம் இயற்கையானது. அதைத் தடுக்க யாராலும் முடியாது. எத்தகைய வைதீகமும் மாற்றத்திற்குள்ளாகித்தான் தீர வேண்டும்.

50 வருடங்களுக்கு முன்பிருந்ததைவிட கடவுளைப் பற்றிய எண்ணம், தெய்வசக்தி படைத்தவர்கள், பெரிய மனிதர்கள் என்பவர்களைப் பற்றிய எண்ணம், வீடு,வாசல், உடை, உணவு, தெருக்கள், வண்டி, குடுமி வைத்தல் ஆகிய எண்ணங்களில், பொருள்களில் பெரிய மாற்றத்தைக் காண்கிறோம். பெண்களின் புடவை, இரவிக்கை, நகைகள், புருஷன், பெண்சாதி முறை ஆகியவற்றில் ஏற்பட்ட மாறுதல்களைப் பாருங்கள். இதனால் பொருட்செலவு அதிகம் இல்லை. நேரமும் பாழாவதில்லை''

*

இறுதியாக ஒன்றே ஒன்று. தீ மிதித்தல் இன்னும் இருக்க வேண்டும் என்று கூறுகிறவர்களே, வாருங்கள்.

கட்டைகளைக் கொளுத்தி நெருப்புத் துண்டுகளைப் பரப்பி அதில் நடக்க வேண்டாம் நீங்கள்.

மணிமுத்தா நதி என்கிற எங்களின் வறண்ட ஆறு ஒன்று இருக்கிறது. அங்கே போவோம்.

உச்சிவெயிலில், கடவுளை உணர்வுபூர்வமாக வேண்டிக்கொண்டு பக்திப் பரவசத்தோடு செருப்பில்லாமல் நீங்கள் நடங்கள். செருப்பு போடாமல் எங்களூர் ஆடு மேய்க்கும் சிறுவர், சிறுமிகளோடு நானும் நடந்து வருகிறேன். யாரை கடவுள் கரை சேர்க்கிறார் என்று பார்த்துவிடலாம் சம்மதமா?

*



படிப்பகம்

ஒவ்வொரு கலைஞனின் மரணமும் சூழல் குறித்த கடுமையான விமர்சனங்களை எழுப்புகிறது. கலைஞனைக் கண்டு கொள்ளாம லிருப்பது என்பது தமிழ்ச் சூழலில் தொடர்ந்து நோய்க் கூறாக இருந்து வருகிறது. Man is left alone in this world என்கிற தத்துவார்த்த நிலைக்குத் தமிழ்க் கலைஞன் ஆரம்பத்திலேயே தன்னைப் பழக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. தமிழ் எழுத் தாளர்களைப் போல most disorganised,most unreliable people வேறு எங்கும் இருப்பார்களா என்பது தெரியவில்லை. பிரமிள் தன் எதிரிகளைத் தானே சம்பாதித்துக்கொண்டார் என்று சிலர் நினைக்க லாம். ஆனால் அது ஒரு தப்புவித்தல் மட்டுமே. புதுமைப்பித்தன், ஜானகிராமன் போன்ற கலைஞர்கள் கூட மிகவும் தனிமைப்பட்டே மரணத்தைச் சந்திக்க வேண்டிவந்தது. அவர்களுக்காவது குறைந்த பட்சம் குடும்பம் என்ற ஒன்று இருந்தது. ஆனால் சமரசங்கள் இல்லாமல் எழுத்தை மட்டும் நம்பி வாழும் ஒரு கலைஞனுக்குச் சமூகத்தில் உள்ள ஆதரவு எத்தகையது என்பது தமிழ்ச்சூழலின் மன சாட்சிக்கு விடப்பட்ட கேள்வியாக முன் நிற்கிறது.

-பிரமிளுக்கு அஞ்சலியாக ரங்கராஜனின்
கட்டுரையிலிருந்து( காலச்சுவடு -17)



என் வாழ்வில் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன...

இன்னும்கூட அவற்றை அனுசரித்துப் போகி றேன்...இது நம் நட்புக்காகவும் தான் என்பதையும் உணர்கிறேன்...நான் விரும்பும் அளவுக்கு போது மான நேரத்தை உன்னோடு செலவிட முடிவதில்லை ...நம் நட்பு எனக்கு முக்கியமானதில்லையென்று எண்ணி நான் இருந்துவிடுகிறேன் என்று ஒரு போதும் நீ கருதிட மாட்டாய் என்று நம்புகிறேன், ஏனெனில் உன்மீது நான் மிகவும் பரிவு கொண்டிருக்கிறேன்.

சிலபோது நம் நட்பும்கூட குற்றம் சுமத்தப் படலாம்...ஆனால் எனக்கு மிக நெருக்கமானவன் நீ என்பது மட்டும் ஒருபோதும் மாற்றமுடியாததாகும்.

**-என். காக்ரெல்**

www.padippakam.com

# சாயும் காலம்

ஜீ.முருகன்

கொஞ்சம் நாட்களாகவே அய்யாவுக்கு உடம்புக்கு முடியவில்லை. ரொம்பவும் பலவீனமடைந்து கொண்டு வந்தார். எந்த நேரத்திலும் அவர் எங்களை விட்டு பிரிந்து விடலாம் என்பதை நாங்கள் புரிந்து கொண்டோம். ஒவ்வொரு நாளும் காலையில் கண்விழிக்கும் போதே இந்த பாரம் வந்து கவிந்து விடும்.

வழக்கம் போலவே இந்த வருஷமும் பனி கடுமைதான். சூரியனின் வருகைக்கு பின்னரும் விலகாமல் மலைகளால் சூழப்பட்டு அது காத்திருந்தது. நெற்கதிர்களுக்கிடையே பின்னப்பட்ட சிலந்தி வலைகளிலும் வரப்புகளில் அடர்ந்து வளர்ந்திருந்த புற்களிலும் உமிழ்நீர் குமிழ்போல திரட்சி கொண்டு படிந்திருந்தது பனி. அய்யாவுடைய மரணத்தை இந்த குளிர் இன்னும் துரிதப்படுத்திக் கொண்டிருந்தது போல எனக்கு பட்டது. வாழ்வின் இறுதி நாட்களை அவர் இந்த ஜனவரி மாதத்திலேயே கூட கழித்து விடலாம்.

விடியற்காலையிலேயே விழிப்பு வந்துவிட்டாலும் அன்று போர்த்தியபடி படுத்துக்கிடந்தேன். களத்தில் சாணித்தண்ணீர் தெளிக்கும் சத்தம் கேட்டது. அதன் பிறகு தண்ணீர் தொட்டிக்கருகே பாத்திரங்கள் உராயும் சத்தம். எனக்கு முன்னமே அவள் எழுந்து வேலைகளை தொடங்கிவிட்டிருந்தாள். பனியில் நனைவது ஆகாது என்றாலும் அவளுக்கான வேலைகளை பகிர்ந்து கொள்ள யார் இருக்கிறார்கள்? அம்மா உயிருடன் இருந்திருந்தால் இவள் இவ்வளவு சிரமப்பட தேவை இருந்திருக்காது. ரொம்பவும் அவசரமாகவே அவள் போய்ச் சேர்ந்துவிட்டாள். வயோதிகம் வருவதற்கு முன்னமே புற்று நோய் அவளை கொண்டு போய்விட்டது. எல்லாமே துரிதகதியில் நடந்து முடிந்து விட்டது. அவளுடைய சத்தத்தால் நிறைந்திருந்த இந்த வீடும் தோட்டமும் சட்டென்று நிசப்தமுற்று வெறுமை குடி கொண்டு விட்டது.

எவ்வளவு நேரம் இப்படி யோசனையுடன் படுத்துக் கொண்டிருப்



படிப்பகம்

www.padippakam.com

பது? என்ற சொரணை இருந்தாலும் எழவில்லை. தாழ்வாரத்தில் படுத்திருக்கும் அய்யாவை போய் பார்த்தாக வேண்டும். மரணம் அவரை நெருங்க நெருங்க அவரை பார்க்க அச்சமாக இருந்தது. ஒரு மனிதனுடைய மரணத்தை அவ்வளவு சுலபமாக எதிர் கொண்டு விட முடியுமாயென்ன? அவருடைய நண்பர்கள், உறவினர்களென்று சிலர் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். இறுதி நாட்களில் அவரை சந்தித்து விட வேண்டும் என்பது அவர்களுடைய அவா. அய்யாவைப் போல நீண்ட வாழ்க்கைப் பயணத்தை மேற்கொண்டவர்களுக்கு எவ்வளவோ உறவுகள், நண்பர்கள். அலைகள் ஒரு புள்ளியில் தொடங்கி விரிந்து விரிந்து பெரிதாகி அடங்கி விடுவது போல அய்யாவும் மௌனத்தில் அமிழ்ந்து போகப் போகிறார்.

ஒரு வழியாக படுக்கையிலிருந்து எழுந்து கொண்டேன். தாழ்வாரத்தை கடக்காமல் வெளியே போய்விட முடிந்தால் எவ்வளவோ ஆறுதலாக இருக்கும்! இது முடியாது.

மரக்கட்டிலில் போர்வைக்குள் அவர் தன்னை சுருட்டிக் கொண்டிருந்தார். இடது காலானது போர்வையை விட்டு விலகி வெளியே வந்து விட்டிருந்தது. போர்வையை இழுத்து மெலிந்திருந்த அந்த காலின் மேல் விட்டு அவரையே உற்று கவனித்துப் பார்த்தேன். பற்களற்ற வாயில் உள்ளிழுத்துக் கொண்டிருந்த உதட்டுத் தசைகள் லேசாக அசைகின்றன. மனம் அமைதியடைந்தது.

வாசல் கதவை திறந்து கொண்டு வெளியே வந்து பனி சீந்தல் உள்ளே போகாதவாறு கதவை சாத்தினேன். காலை வெளிச்சம் பட்டவுடன் மனம் கூசிப் போகிறது. இந்த கிராமத்தின் நடைமுறைகளோடு ஒன்றிப் போவதற்கு இன்னும் எவ்வளவு காலமாகும்? தினமும் என்னுடைய விழிப்புக்கு முன்னமே எல்லா வேலைகளும் தொடங்கி விடுகின்றன. செய்ய வேண்டுமென்றால் எவ்வளவோ வேலைகள் எனக்காக இங்கே காத்திருக்கின்றன. ஆனால் சிலவற்றை மட்டும் தான் செய்ய முடிகிறது. வேலை செய்வதைவிட உத்தரவுகள் பிறப்பிப்பது சுலபமாக இருப்பதால் மனம் சோம்பேறித் தனத்திற்கு துணைபோகச் சொல்கிறது. அதே நேரத்தில் குற்ற உணர்விலிருந்தும் விடுபட முடியவில்லை. திடீரென்று ஒரு நாளில் முழு விவசாயக்காரனாக மாறிவிட முடியுமா?

சுப்ராயன் வந்திருப்பதாக மனைவி சொன்னாள். வந்திருக்கிறானா? எவ்வளவு நாட்களாகிறது இவனைப் பார்த்து! ஆறு மாசமிருக்குமா? அதிகமாகக் கூட இருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

கட்டுத்தறியின் அருகில் அவனைப் பார்த்தேன். சாணம் அள்ளிக் கொண்டிருந்தான். மாடுகளெல்லாம் போருக்கு பக்கத்தில் கட்டப்பட்டிருந்தன. இன்னும் மிச்சமிருந்த இருளிலும் பனியிலும் அவன் மங்களாகத் தெரிந்தான்.

பருவங்களின் வருகையைப் போலவே அவனுடைய வருகையும் நிகழ்ந்து விடுகிறது. திடீரென்று ஒரு இரவிலேயே ஒரு பனிக் காலமோ மழைக்காலமோ தொடங்கிவிடுவது போலவே அவனும், இங்கே வந்து எங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிடுகிறான்.

அவனிடம் முன்பிருந்த உற்சாகம் தென்படவில்லை. மந்த கதியில் இயங்கிக் கொண்டிருந்தான். வயோதிகம் அவனையும் தின்று கொண்டிருக்கிறது.

அவள் சாப்பிடக் கூப்பிட்டும் பிறகு சாப்பிடுவதாகச் சொல்லி விட்டான். சாப்பிட்டாலும் முன்பு போல அவனால் முடியுமா? ஒரு இலைமுழுசும் சாப்பாட்டை நிறைத்தாலும் வேண்டாமென்று சொல்லாத பசி அவனிடம் இப்போது இருக்குமா? என்னிடம் கூட அவன் அதிகமாகப் பேசவில்லை. 'எப்ப வந்தண்ணா' என்று விசாரித்ததற்கு 'இதோ இப்பத்தான்' என்றானே அது தான். பழைய யூரியா பைகள் சிலதை எடுத்துக் கொண்டு போய் தென்னை மரநிழலில் உட்கார்ந்து கொண்டான். பையை நார்நாராக பிரித்து எடுத்து ஒரு பக்கமாக குவித்து வைத்தான். மாடுகளுக்கு இன்று புதுக்கயிறுகள் தயாராகி விடுமென்று நான் முடிவு செய்து கொண்டேன். அவன் இங்கே வரும் போதெல்லாம் இப்படி ஏதாவது வேலைகள் அவனுக்கென்று காத்திருந்தன. போன முறை வந்தபோது கிணற்றுக்குள் இறங்கி சுவர்களில் வேர்விட்டு அடர்ந்திருந்த செடிகளையும் புற்களையும் பிடுங்கி சுத்தம் செய்து விட்டுப் போனான். இடுப்பில் கயிற்றை கட்டிக் கொண்டு ஏதோ ஒரு ஜந்து போல சுவர்களில் தாவித்தாவி அவைகளை பிடுங்கி எடுத்து மேலே கொண்டு வந்தான்.

அவன் எங்கே இருந்தாலும் அவனுடைய உயிர் மூலம் இங்கேயே நிலை கொண்டிருந்தது. அவன் இங்கிருந்து போகும் போது எதையோ ஒன்றை மறந்து வைத்துவிட்டுப் போய்விட்டவனைப் போலவும் திரும்பவும் அதை எடுத்துப் போகத்தான் வந்தவன் போலவும் வருவான். ஐந்தாறு வருஷம்தான் இருக்கும் அவன் இங்கிருந்து போய். வேறொரு தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த அவனுடைய மகன் ஒப்பந்த காலத்திற்கு முன்னமே எங்கோ ஓடிப் போய் விட்டதால் அதற்கு பதிலாக இவன் போகவேண்டிய நிர்ப்பந்தம். பணம் கொடுத்து பைசல் செய்து



படிப்பகம்

www.padippakam.com



விடுவதாக அய்யா சொல்லியும் கூட அவன் கேட்கவில்லை. இங்கிருந்து போய் விடுவது என்ற தீர்மானத்தில் உறுதியாக இருந்தான். இது எங்களுக்கு வியப்பாக இருந்தது. அம்மா ரொம்பவும் வருத்தப்பட்டார். நாங்கள் யாரும் அவனை ஒன்றும் சொல்லி விடவில்லை என்பது தெளிவு. பிறகு ஏன் அவன் இங்கிருந்து போக வேண்டும்? இன்றுவரை புரியவில்லை.

அம்மாவுக்கு அவனிடம் தனி வாஞ்சை உண்டு. வீட்டின் எல்லா சமாச்சாரங்களையும் அவனிடம் பகிர்ந்து கொள்வாள். வீட்டுக்குள் பிரவேசிக்க முடியாவிட்டாலும் அவனும் எங்கள் குடும்பத்தில் ஒருவனை போலவே இருந்தான். அவனுக்குத் தெரியக் கூடாத ரகசியம் எதுவும் உண்டா என்று எங்களுக்கு தெரியவில்லை.

அய்யாவை அவருடைய படுக்கையிலிருந்து கைத்தாங்கலாக பிடித்துக் கொண்டு போய் தோட்டத்தில் உட்கார வைக்கப் போனபோது எழுந்து நின்று அவரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அய்யா அவன் வந்திருப்பதை கவனித்தாரா என்று தெரியவில்லை. மிக ஆழத்தில் கலைந்து கொண்டிருந்த நினைவுகளில் இவன் முகமும் கலைந்து விட்டிருக்கலாம். இவனை கவனிக்க வேண்டும் என்ற பிரயாசையும் அவரிடம் தென்படவில்லை. அவருடைய கண்கள் ஒளிமங்கியிருந்தன.



படிப்பகம்

www.padippakam.com

பொழுது உச்சிக்கு வந்துவிட்டிருந்தது. அதே இடத்தில் இருந்தபடியே பிரித்துப் போட்டிருந்த நார்களை கயிறாக திரித்துக் கொண்டிருந்தான். அவன் எதற்காக இன்னும் சாப்பிடாமல் உட்கார்ந்திருக்க வேண்டுமென்று வருத்தமாக இருந்தது. அவள் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்துவிட்டாள். எனக்கு 'பசியில்லம்மா அப்புறம் சாப்பிடறேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

மதிய உணவுக்கு பிறகு சிறிது நேரம் உறங்கி எழுவது எனக்கு பழக்கமாகிவிட்டது. கட்டிலில் கிடந்தபடி ஜன்னலின் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தேன். கிணற்று மேட்டின் மேல் வளர்ந்திருந்த வேப்பமரத்தில் மரங்கொத்தி தென்பட்டது. தினமும் அதே நேரத்தில் அதைப் பார்க்க முடிகிறது. வேறு போக்கிடம் எதுவும் அதற்கு இல்லைபோலும். மதிய நேரத்தை கழிக்க அது ஏன் வேறொரு மரத்தை தேர்ந்தெடுக்கக் கூடாது? உயிர்களின் நடவடிக்கைகள் விநோகமாகத்தான் இருக்கின்றன.

மாடுகளெல்லாம் அறுவடையான வாழைத் தோட்டத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. சாந்திரத்திற்குள் இரண்டு ஜோடி மாடுகளுக்கான கயிறுகளை அவன் செய்துவிட்டிருந்தான். நான்கும் திடமான கயிறுகள். இன்னும் ஆறேழு மாசத்திற்கு குறையாமல் தாங்கும். முட்டு முடிச்சிகள் இல்லாமல் அவ்வளவு நேர்த்தியாக முடித்திருந்தான். இப்படிப்பட்ட கயிறுகளை உருவாக்குவதற்கு லகுவான கைகள் வேண்டும்.

பொழுது சாய்ந்ததும் மாடுகளையெல்லாம் ஒட்டிக் கொண்டு வந்து தீணித் தொட்டியில் தண்ணீர் காட்டிக் கொண்டு வந்து கட்டுத்தறியில் கட்டினோம். இருவரும் ஒவ்வொரு மாடாக பிடித்து பழைய கயிறுகளை அவிழ்த்து விட்டு புதுக் கயிறுகளை மாற்றினோம். போரிலிருந்து வைக்கோல் பிடுங்கி வந்து எல்லா மாடுகளுக்கும் போட்டான். பரபரப்புடன் வைக்கோலை தின்னத் தொடங்கின மாடுகள்.

மலைக்கப்பால் விழுந்த சூரியனின் கிரணங்கள் மேற்கு திசை வானத்தில் அடர்ந்து கிடந்த மேகங்களை பிரகாசமடையச் செய்து விட்டு மெல்ல மங்கத் தொடங்கியது. இருள் கிழக்கிலிருந்து படர ஆரம்பித்தது.

நான் தொட்டிக்கு சென்று கைகால்களை அலம்பிக் கொண்டு துடைத்தபடி திரும்பினேன். பழைய கயிறுகளை கொண்டு போய் கொட்டகையில் இருந்த பரணில் எறிந்து விட்டு அவன் வெளித் திண்ணையில் வந்து நின்று கொண்டிருந்தான். வீட்டிற்குள் என் மனைவியின் அழுக் குரல் கேட்டது. ■



படிப்பகம்

www.padippakam.com

# கிளிக்கவிதை

கவிதாபாரதி



கூண்டுக்குள்வைத்து
கிளிப்பேச்சுக் கேட்பவர்கள்
குழந்தைபோல் வளர்ப்பதாய்ச் சொல்கிறார்கள்

கதவு திறந்தேதான் வைத்திருக்கிறார்களாம்
சிறகை நறுக்கிவிட்டு
சீட்டுக் கலைக்கச் சொன்னவர்கள்

வானம்பற்றி நினைப்பதும் பாவமென
மியாவ் வேதம் கற்றுவைத்திருக்கின்றன
மூளைக்குள் கூண்டு சுமக்குமிந்தக் கிளிகள்

அதனதன் இயல்பிழந்து
அடைபட்டுக்கிடக்கும்
எல்லாம் ஒன்றுதான்
கிளியும் புலியும்
நீயும் நானும்



படிப்பகம்

www.padippakam.com

# இரண்டு நாடகங்கள் பற்றிய குறிப்புகள்

கிருஷ்ண கோபாலன்

ஒன்றுக்கொன்று தொடர்பற்ற இரண்டு அமைப்புகளால், தொடர்பற்ற இரண்டு ஊர்களில் நடத்தப்பெற்ற இரண்டு நாடகங்களை அண்மையில் கண்ணுற நேர்ந்தது.

முதல் நாடகம் தமிழ்ச்சான்றோர் பேரவையின் சார்பில்சென்னை ஜெர்மன் அரங்கில் நடைபெற்ற களரி குழுவினரின் 'எந்தையும், தாயும்...'

இன்னொன்று புதுச்சேரி கருவடிக்குப்பத்தில் நடந்தது. கலை இலக்கியப் பெருமன்றத்தின் துணை அமைப்பான கோமாளி கலைக்குழுவினரின் அந்த நாடகம் குயில்தோப்பு.

இரண்டும் அதனதன் அளவில் பார்வையாளர்களின் இருதயம் பிழிந்து தாக்கத்தைப் பதித்துச் சென்றன.

தற்போது இலண்டனில் வசிக்கும் புலம்பெயர்ந்த இலாங்கைத் தமிழரான தாசீசியஸ் எந்தையும் தாயும்... நாடகத்தின் நெறியாளுனர்.

''எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி...'' என்ற பாடல்வரிகளோடு மெல்ல மெல்ல மேடையில் வெளிச்சம் அவிழ்ந்து மூன்று குடும்பங்களைக் காட்சிப்படுத்துகின்றது.

தன் பதினொரு பிள்ளைகளையும் பதினொரு நாடுகளுக்கு அகதிகளாய் அனுப்பிவிட்டு அவர்களின் கடிதம் எதிர்பார்த்துக்கிடக்கும் பெரியய்யா நாடகத்தின் பிரதானப் பாத்திரம். தன் மகளையும், மகனையும் வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு இதேபோல் கடிதம் எதிர்பார்த்திருக்கும் நடுத்தரவயது கணவனும் மனைவியும் இன்னொரு குடும்பம்.

மகனோடும், மகளோடும் வாழ்ந்தபடி அவ்வப்போது பெரியய்யாவுக்கு உதவியாக இருக்கும் இன்னொரு தந்தை-இது மூன்றாவது குடும்பம். ஒரே நேரத்தில் மூன்று குடும்பங்களும் மேடையிலிருக்கின்றன... நாடகப் பாத்திரங்களின் ஒழுங்கமைக்கப்பட்ட நகர்வுகளின் மூலம் தெரு, சுற்றுச்சுவர், நுழைவாயில் எதுவுமேயில்லாமல் காட்சிக்குப் புலனாகின்றன.

புலம்பெயர்ந்த தம் புதல்வர்களிடமிருந்து கடிதம் எதிர்பார்த்துக்



படிப்பகம்

www.padippakam.com

காத்துக்கிடக்கிற நிலையும், அதன் தவிப்பும் நாடகப்பொருளாக அமைந்திருக்கின்றன.

தெருவில் கேட்கும் ஒவ்வொரு சைக்கிள் மணியோசையையும் தபால் காரரின் மணியோசையாய் நம்பி தட்டுத்தடுமாறி ஓடிவந்து பார்த்து ஏமாறும் பெரியய்யா கடைசியில் கடிதமெதுவும் கிடைக்காமலே செத்துப் போகிறார். இந்த நான்கு வரிகளை ஒரு மணி நேரத்துக்கும் மேலான நாடகமாகப் பார்க்கும்போது ததும்பிய உணர்வுகளை எழுதிக்காட்டுதல் இயலாததாகும்.

முகபாவங்கள், அங்க அசைவுகள் எல்லாவற்றிலும் நம் நாடகமேடைகள் அறியாத நுட்பங்கள் பெரியய்யாவாக நடித்தவரிடம் இயல்பாக இருந்தன. அவரும் கொழும்புவைச் சேர்ந்தவர் என்பதால் தன் நாட்களை மேடையில் வாழ்ந்து காட்டியதாகவே தோன்றியது. ஏக்கங்களையும், இயலாமைகளையும் தேய்ந்த சிரிப்பில் மறைக்கும் அவருடைய பாத்திரம் அமைதி குலைந்த அத்தனை நாடுகளின் பிரதிநிதியாகவும் கூட அவரை நிறுத்தி கண்ணீர்க்குளத்தில் கல்லெறிந்தது.

கடிதம் எதிர்பார்க்கும் சூழலில் தொடங்கி, அதிலேயே முடித்து அரசியல் எதையும் தொடாமல் எல்லாச் சோகங்களையும், பரிதவிப்பையும் உணர்த்தியது தாசீசியசின் சிறப்பான நெறியாளுமையை வெளிப் படுத்தியது.

ஒருபுறம் பொழுதுபோக்கு என்ற பெயரில் கேளிக்கை நாடகங்களை யும், நவீனம் என்கிற பெயரில் நம் அடையாளங்களற்ற இருண்மைகளையும் அரங்கேற்றும் நம்நாடகங்களுக்கும் மேற்சொன்ன நாடகத்துக்குமான அடிப்படை வேறுபாடுகள் வாழ்க்கை...வாழ்க்கையின் உயிர்ப்பிலிருந்து கிடைக்கும் சத்தியம் முதலியவை.

குயில்தோப்பு நுட்பங்களோ, திறமையான மேடை அமைப்புகளோ எதுவுமற்ற நிஜ சாதாரண நாடகம்...எனினும் அது உணர்த்திய செய்தி வெட்கித் தலைகுனிய வேண்டியது.

புதுவையிலுள்ள கருவடிக்குப்பத்தில் தன் தாய்மடியில் பாரதியைத் தாங்கி கவிதை தந்த குயில்தோப்பு தனியார் சிலரால் குடியிருப்பு மனையாக்கப்பட்டுவிட்டது என்பதுதான் குயில்தோப்பின் செய்தி.

நாடக இறுதியில் 'பாரதியை மறந்துட்டீங்க...' என்று ஆவேசப்பட்ட ஆதிராமனின் கோபம் எல்லோரையும் ஆட்கொண்டது. நாடகம் முடிந்து வரும்போது, இதுதான் குயில்தோப்பு என்று நண்பர்கள் காட்டினார்கள். அடையாளக்கற்கள் நடப்பட்ட , பிரமாண்டமான நுழைவு வாயில்களோடு மரங்கள் எதுவுமற்றதொரு வெட்டவெளி மட்டுமே அங்கிருந்தது.

முதல் நாடகத்தில் கேட்ட 'எந்தையும் தாயும்...'என்ற பாடலின் சோகமிச்சங்கள் அப்போதும் கேட்பது மாதிரியிருந்தது. ■



படிப்பகம்

www.padippakam.com

# பாம்பும் கண்ணாடியும்

## வைக்கம் முகம்மது பஷீர்
## தமிழில்: எஸ்.ராமகிருஷ்ணன்

"பாம்பு எப்போதாவது உங்கள் உடலின் எப்பகுதியையாவது சுற்றிக் கொண்டதுண்டா? நெளுநெளுவென உயிரோடு திரியும் பாம்பைப் பற்றிக் கேட்கிறேன்?" எல்லோரும் அமைதியாகயிருந்தார்கள். இந்தக் கேள்வியைக் கேட்டவர் ஒரு ஹோமியோபதி மருத்துவர். நாங்கள் பாம்பைப் பற்றி பேசிக்கொண்டிருந்தபோது இந்தக் கேள்வி வந்தது. டாக்டர் தன் வாழ்வில் நிகழ்ந்த சம்பவத்தை நினைவு கூற நாங்கள் கேட்பதற்கு ஆர்வமாக இருந்தோம். டாக்டர் குரல் துவங்கியது.

அது கோடைக்கால இரவு. பத்து மணியிருக்கும். நான் உணவு விடுதியில் சாப்பாட்டை முடித்துக்கொண்டு அறைக்குத் திரும்பினேன். அறைக் கதவைத் திறந்தபோது...ஷ்...ஷ் எனும் சப்தம் நீண்டது. எனக்கு அந்தச் சப்தம் பரிச்சயமானதே. அந்த அறையில் நானும் சில எலிகளும் தங்கியிருந்தோம், என்னுடைய தீப்பெட்டியை உரசி மேஜை மீதிருந்த மண்ணெண்ணெய் விளக்கைப் பற்ற வைத்தேன்.

அந்த வீட்டிற்கு மின்சார வசதியில்லை. அது குறைந்த வாடகை அறை. அப்போதுதான் நான் ஹோமியோ மருத்துவ தொழில் துவங்கியிருந்ததால் எனக்கு வருமானமும் அதிகமில்லை... என்னிடம் அறுபது ரூபாய் மட்டுமேயிருந்தது. அது என் சூட்கேஸில் இருந்தது. என்னிடமிருந்தவை சில வேஷ்டி, சட்டைகள் மற்றும் ஒரு கோட்டு. அந்தக் கோட்டை நான் அணிந்திருந்தேன்.

இப்போது அறைக்குள் வந்ததும் அதைக் கழட்டி தொங்க விட்டேன். அறையின் இரண்டு ஜன்னல்களையும் திறந்தேன். ஜன்னல் வெளியே முற்றத்தைப் பார்க்கலாம். சிவப்பு ஓடுகளும் தெரியக்கூடும். அந்த வீட்டின் விட்டத்தில் எலிகளின் நடமாட்டம் அதிகம். அதனாலேயே நான் படுக்கையை சுவரோரமாக விரித்துக்கொண்டேன். படுத்துக் கொண்ட போதும் உறக்கம் வரவில்லை. எழுந்து வராந்தாவிற்கு காற்று வாங்க வந்தேன். காற்று ஒருங்கியிருந்தது. திரும்பவும் அறைக்குச் சென்று நாற்காலியில் உட்கார்ந்தேன். காற்றில்லை. பெட்டியைத் திறந்து உள்ளேயிருந்த மெட்டீரியா மெடிக்காவை எடுத்தேன். மேஜைமீது



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

விளக்கின் அருகில் பெரிய கண்ணாடியிருந்தது. அதனடியில் தலை சீவும் சீப்புகள் கிடந்தன.

கண்ணாடி அருகில் இருக்கும் போது, அதில் தன்னை பார்த்துக் கொள்ளும் இச்சை எழுவது இயல்புதானே? நானும் முகம் பார்த்துக் கொண்டேன். அந்த நாட்கள் இளமையானவை. என் அழகையும் வசீகரத்தையும் வெகு வாக ரசித்த நாட்கள். அத்தோடு எனக்குத் திருமணமும் ஆக வில்லை. இளம் மருத்துவர் என்ப தால் அழகாகயிருக்க வேண்டு மென விரும்பினேன். கண்ணாடியில் கலைந்த என் தலைமுடியைச் சீப்பால் சீவி விட்டேன். அப் போதும் அந்த சீறும் சப்தம் திரும்பவும் கேட்டது.

முகத்தை மீண்டும் ஒருமுறை கண்ணாடியில் பார்த்துக் கொண் டேன். அப்போது ஒரு முக்கியமான முடிவு ஒன்றையும் எடுத்தேன். இனிமேல் தினமும் ஷேவ் செய்து விடவேண்டும். மீசையைக் கத்தரித்து வளர்த்தால் முகம் இன்னமும் வசீகரமாகயிருக்கும் என்பதே அம்முடிவு. ஒரு டாக்டர், பிரமமச்சாரி, அழகாக இருக்க வேண்டாமா என்ன?

நான் கண்ணாடியைப் பார்த்துச் சிரித்துக் கொண்டேன். வசீகரச் சிரிப்பு. இன்னொரு தீர்மானமும் மனதில் உருவானது. இனி எப் போதும் இது போன்ற சிரிப்பு என் முகத்தில் இருந்து கொண்டிருக்க வேண்டும். அது தான் ஜோராக இருக்கும். கல்யாணமாகாத டாக்ட ராக இருப்பது எளிதான விஷயமாயென்ன?

திரும்பவும் சீறும் சப்தம் எங்கிருந்தோ கேட்டது.

நான் அறைக்குள்ளே எழுந்து நடந்தபடி பீடி பற்ற வைத்துக் கொண்டேன். சுகமான சிந்தனை எனக்கு உருவானது. நான் கல் யாணம் செய்துகொள்ள வேண் டும். அதுவும் பெண் டாக்டராகப் பார்த்து, அவளும் வசதியான வளாக, தொழிலில் கெட்டிக் காரியாக இருந்து விட்டால் கொண்டாட்டம். ஆனால் அவள் கட்டாயம் குண்டாகத்தானிருக்க வேண்டும். அதற்குக் காரண மிருக்கிறது. நான் ஏதேனும் அற்பத் தவறுகள் செய்துவிட்டுத் தப்பி ஓடினால், அவள் என்னை விரட்டி வந்து பிடிக்க முடியாது பாருங்கள்; அதற்குத் தான் அவள் குண் டாகயிருக்க வேண்டுமென்கிறேன். யோசனைகளுடன் திரும்பவும் நாற்காலியில் அமர்ந்தேன். அந்தச் சீறும் சப்தம் கேட்க வில்லை. மேலேயிருந்து ரப்பர் குழாய் போல கீழே ஏதோ ஒன்று விழும் சப்தம் கேட்டது. எதுவும் உடைய வில்லை. என்னவென நான் பார்க்க எழும் முன்பே பருத்த ஸர்ப்பம் ஒன்று என் தோள் மீது ஊர்ந்தது. பாம்பு ஊர்ந்ததும் நான் திரும்பிய தும் ஒரே நேரத்தில் நடந்தேறியது.

நான் கத்தவோ, குதித்து ஓடவோ முடியவில்லை. அது போன்ற எதையும் செய்யும் நேரமில்லை இது எனவும் புரிந்தது. அந்தப் பாம்பு மெல்ல எனது தோளில் ஊர்ந்து, இடது கைப்பக்கம் சுருண்டு கொண்டது. நாகத்தின்



படிப்பகம்

www.padippakam.com

தலை, எனது முகத்திலிருந்து நாலு அங்குல விரல் இடைவெளியில். நான் மூச்சுவிடக்கூட முடியாமல் கல்போல் சமைந்து நின்றேன். மனம் மிக வேகமாக செயல்பட்டது. கதவு திறந்து கிடந்ததால் அறையில் இருள் நிரம்பியிருந்தது. உயிருள்ள சிலை கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பது போல நானிருந்தேன்.

அப்போது இந்த பிரபஞ்சத்தைப் படைத்தவரின் ஞாபகம் வந்தது. கடவுள் எங்கும் வியாபகமாக இருக்கிறார். நான் ஏதேனும் தவறாகச் சொல்லி அவருக்குப் பிடிக்காமல் போய்விட்டால்? இருதயத்தின் ஆழத்திலிருந்து நான் அந்த உயிர்ப்புள்ள வார்த்தையை கூறினேன், "கடவுளே". எனது இடது கை லேசாக வலிக்க ஆரம்பித்தது. இரும்பு வளையம் சுற்றியதுபோல. இல்லை, நெருப்பு வளையமிட்டது போல கை நெருக்கப்படுவதை உணர்ந்தேன். எனது கை மெல்ல பலத்தை இழந்து கொண்டிருந்தது. நான் என்ன செய்வது? கை லேசாக நகர்ந்தாலும் பாம்பு என்னைக் கொத்திவிடக்கூடும். ஒருவேளை அது என்னைக் கொத்திவிட்டால் என்ன மருந்து சாப்பிடுவது? அந்த அறையில் மருந்து புட்டிகள் எதுவுமில்லை. ஏழை, முட்டாள் மருத்துவனாயிற்றே நான். என்னைப் பார்த்து சிரிக்கும் அப்பாயத்தைக் கண்டபடியிருந்தேன். என் குரலுக்குக் கடவுள் பதில் கூறியது போல, நாகம் தன் தலையைத் திருப்பித் தன் உருவத்தைக் கண்ணாடியில் பார்த்தது. கண்ணாடி பார்த்த முதல் பாம்பு இதுதான் என என்னால் உறுதியாகக் கூறமுடியாவிட்டாலும், இப்படி பாம்பு தன்னைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளும் என்பதே வியப்பாகயிருந்தது. பாம்பு தன் அழகை தானே ரசித்துக் கொள்ளுமா? என்னைப் போலவே அதுவும் இன்னமும் அழகாக இருக்க வேண்டி தன் கண் இமைகளைத் திருத்தவோ, படத்தினை அழகாக்கவோ முயலுமா?

எனக்கு எதுவும் புரியவில்லை. இந்த நாகம் ஆணா? பெண்ணா? என்பது கூட எனக்குத் தெரியவில்லை. நாகம் என் கையில் இருந்து ஊர்ந்து இறங்கிக் கண்ணாடியை நோக்கி நகர்ந்தது. தன்னை வெகு அருகாமையில், கண்ணாடியில் பார்த்து ரசிக்க விரும்பியதோ என்னவோ?

நான் சிலைபோல இருந்ததை உதறி உயிர்பெற்றேன். நாற்காலியில் இருந்து எழுந்தேன். வராந்தாவிற்கு வந்தேன். அங்கிருந்து வெளியேறி ஓடத் துவங்கினேன்.

இவ்வளவு தானா! என அனைவரும் ஆசுவாசமடைந்தனர். எல்லோரும் பீடி புகைக்கத் துவங்கினார்கள். யாரோ கேட்டார்கள்.

"டாக்டர், உங்க மனைவி ரொம்பவும் குண்டோ?'

"இல்லை...கடவுள் விருப்பம் வேறாகயிருந்தது. அவள் மெலிந்தவள்; அன்புள்ளம் கொண்டவள்."

யாரோ திரும்பவும் கேட்டார்கள்,



படிப்பகம்

www.padippakam.com

"டாக்டர், நீங்கள் ஓடும் போது பாம்பு திரும்பவும் உங்களைத் துரத்தி வந்ததா?"

"நான் என் நண்பர் வீடுவந்து சேரும் வரை பின்னால் திரும்பிப் பார்க்காமலே ஓடி வந்தேன். வந்ததும் உடம்பெல்லாம் எண்ணெய் தடவிக் குளித்தேன். வேறு ஆடைகளை மாற்றிக் கொண்டேன். அடுத்தநாள் காலை, என் நண்பர் மற்றும் ஒன்றிரண்டு பேரைக் கூட்டிக் கொண்டு அறையில் இருந்த பொருட்களை எடுத்துவரப் போனேன். நாங்கள் எடுத்துக் கொண்டுவர அதிகமிருக்கவில்லை. கதவு திறந்து கிடந்ததால், யாரோ ஒரு திருடன் இரவே பாதிக்கும் மேல் சுருட்டிப் போய்விட்டான். ஆனால் அவன் என்னை அவமானப் படுத்தும்படி ஒன்றை மட்டும் விட்டுப் போயிருந்தான்"

"என்ன அது?"-என நான் கேட்டேன். டாக்டர் சொன்னார்:

"என்னுடைய அழுக்கான பனியன் அது. அந்தத் திருடன் சுத்தம் பார்ப்பவனாகயிருக்க வேண்டும். இதை எடுத்துக் கொண்டுபோய் சோப்போட்டால் சுத்தமாகிவிடும். அதை விரும்பாமல் போய்விட்டான் ராஸ்கல்"

மறுநாள் போனபோது நாகம் அங்கேயிருந்ததா?

"இல்லை.. ஆனாலும் அதுபோல வசீகரம் மிளிரும் அழகுடைய நாகம் எதையும் நான் அதன் பின் பார்க்கவேயில்லை" என்றார் டாக்டர்.

■


தாமரை

☐ மலர்: 38, இதழ்: 9

மே '97

☐ நிறுவக ஆசிரியர்:
ப.ஜீவானந்தம்

ஆசிரியர்;
ப.மாணிக்கம்

பொறுப்பாசிரியர்:
சி.மகேந்திரன்

☐ ஜனசக்தி அச்சகம், 161-பிரகாசம் சாலை, சென்னை-108 என்ற முகவரியிலிருந்து அச்சிட்டு வெளியிடுபவர்: எஸ்.எஸ். தியாகராஜன்

☐ தொடர்பு முகவரி:

தாமரை

19, செவாலியே சிவாஜி கணேசன் சாலை,
தி.நகர், சென்னை-17.

தொ.பே. 434 7689




படிப்பகம்

www.padippakam.com

*Best compliments from....*

**THIRUMALAI GROUP OF COMPANIES**
**THIRUMALA CEMENT AGENCIES (P) LTD**
**THE MERCURY CEMENTS**
**THIRUMALA PADMA CEMENT TRADING COMPANY**

***Admn Office:*** *14, 80 Feet Road Sathya Gardens.*
*Saligramam, Madras-600 093.Phone: 4835829, 4833697*

***Salem Branch:*** *41/A&B Suramangalam Main Road*
*Salem-636 009 Phone:53369*

***Branch Office:*** *5/48 Mettupalayam Road,*
*Kavundapalayam Colony Post,*
*Coimbatore-641 030. Phone:432631*

Cosignment Sale Agents

# Coromandel Cements Limited

**BHEEMA BRAND**

**KCP Cement**

Bonds of a life Time

PHNONE- 473281
477581

# R E V A T H I & C O

*Authorised Stockist: Sankar, Chettinad K.C.P.*

Periyar Colony (Opp) Anupparpalayam (PO)

**TIRUPUR-641 652**

Regd.No.M/ 9140 THAMARAI
WPP.No. 35.TN/MS(N) 937 Regd. As Newspaper in Srilanka
www.padippakam.com

என்னுயிர்
வாழ்க்கைத் துணையே,
உன்னைத் தவிர
வேறு ஒரு பெண்ணைத்
தொடமாட்டேன்.
இது சத்தியம்



இல்லறமே நல்லறமாய் வாழ்வோர்க்கு
என்றும் இல்லை எய்ட்ஸ் பயம்.

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு
417, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை - 600 008.
போன் : (044) 8255261 / 8255467 / 8254917 (சென்னை)

24 மணி நேரமும் இயங்கும் ஹாட்லைன்
(044) 8256882 / 8256864 (சென்னை)

GALAXY / AS / 1015